670

670
2-53

REGISTERED No. M. 6165. அ. 2

பத்ஹுல் இஸ்லாம்

فتح الإسلام

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

11 JUN 1953

ஜூன் 1953.

விஷயம்.		பக்கம்.
பாஸோவின் மர்மம்	(தொடர் கதை)	1
தெய்வீகக் காதல்	(தொடர் கதை) (மாஸ்டர் கமல் பாபு)	11
கோதுமை ஹல்வா	(மாதர் பகுதி)	19
மாண்புறும் நோன்பு	(வேளாங்கண்ணி-சாந்திதாஸன்)	20
பொறுமையின் பரிசு	(எ. எ. ரஜாக்பாஷா)	22
விகடத் துண்டுகள்		31

...ல் இஸ்லாம் ஆபீஸ் :
...ெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JL
Q7ஊ211, N24FI
N53
187041

பத்ஹுறூல் இஸ்லாம்.

சந்தா விபரம்:	இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு	
	வருஷ சந்தா	ரூ. 1-8-0
	தனிப் பிரதி	அணா. 2
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா		ரூ. 2-0-0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

பத்ஹுறூல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

ஸீரத்துல் பாறூக்.

இதாகிறது, நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இரண்டாவது கலிபாவாகிய உமர் இப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரம்.

இதில் அவர்களுடைய பிரபல்யங்களும், கீர்த்திகளும், வீரியங்களும், யுத்த சாமார்த்தியங்களும், தீனில் வழுவாது நடக்கும் நீதிகளும், அடங்கியிருக்கின்றன. எல்லா முஸ்லிம்களுக்கும் அவர்களுடைய மகிமை புலப்பட்டிருப்பதால் நாம் அதை இங்கு விபரித்தெழுதவில்லை. இச்சரித்திரம் வாசிக்க வாசிக்க ஞானத்தத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கு மென்பதில் ஐயமில்லை. இது இரண்டு பாகமாகும். முதற் பாகத்தில் அவர்களுடைய சரித்திரங்களும், இரண்டாம் பாகத்தில் அவர்களுடைய நீதிகளும் அடங்கி இருக்கின்றன. இரண்டு பாகமும்சேர்த்தது இதன் விலை ரூ 3

கிடைக்குமிடம்:

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

கெ. 20; ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்

ஜூன்—1953.

பாஸோவின் மர்மம்.

(தொடர் கதை 6-வது பகுதி)

அத்தியாயம் 17

அந்த சக்கரத்தை பிடித்துக் கொண்டு அங்குள்ள சுவற்றைக் கவனித்தார். காலில் ஆற்றின் தண்ணீர் அடித்துக் கொண்டேயிருந்தது. அந்த மரவராண்டாவின் கீழ் இருட்டாக யிருந்ததால் ஒரு கையினுல் சக்கரத்தை பிடித்துக்கொண்டு மற்றொரு கையினுல் தனது கோட்டிலுள்ள ஒரு சிறிய டார்ச் விளக்கை எடுத்து உபயோகித்து கவனித்தார். அங்கு சுவற்றின் ஒரு பெரியகல் கதவைப் போல் திறக்கப்பட்டிருப்பதைப் பார்த்தார். மேலே வராண்டாவில் நின்று கொண்டிருந்த சோடே "ஏதாவது கண்டு பிடித்தீர்களா?" வென்று கேட்க "ஆம்! இங்கு ஒரு வழி தென்படுகிறது. யாரோ அவசரத்தில் அதை மூடாமல் விட்டு விட்டிருக்கிறுர்கள்" என்று ஷம்ஸ் சொல்லிக் கொண்டே, டார்ச் வைத்துள்ள கையினுலேயே அந்த கல்லை தள்ளினுர். அது உள்ளேயே அமுங்கி விட்டது. அங்கே வழி 2 அடி நீளம் 1½ அடி அகலமிருந்தது. ஷம்ஸ் அந்த சக்கரத்தின் நடுவிலுள்ள இரும்புகம்பியில் மெதுவாக நடந்து அந்த வழியின்முன் வந்து, வழியினுள் தலையையும் ஒருகையும் புகுத்தி டார்ச்விளக்கு மூலமாக உள்பார்த்தார். கற்களால் கட்டப்பட்ட ஒரு பெரிய அறை தென்பட்டது. உடனே அத்துவாரத்தினுள் நுழைந்து அவ்வறையினுள் சென்றுர். பின்னுல் சோடேவும் வந்தான். அந்த ரூமில் சில மரபென்சுகளும் தச்சன் உபயோகிக்கும் சாமான்களு மிருந்தன. சுவற்றில் ஏதோ கீறின கோடுகளாகவிருந்தன. ஏதோ கனத்தசாமான் எடுக்கும்போது சுவற்றில்பட்டால் எவ்வாறு கோடுகளேற்படுமோ அவ்வாறிருந்தன சாமான்களை பெட்டிலடைக்கும் போது உபயோகிக்கும் மாத்துள் ஒரு மூலையில் கிடந்தது அந்த அறையில் இன்னொரு கதவுமிருந்தது.

அதைத்திறந்து பார்க்க ஒரு குகைபோல் வழி ஆற்றைநோக்கி சென்றது. அந்த வழியிலே சென்று பார்த்தார். அங்கும் இரு பக்கத்து சுவர்களில், அறையிலிருந்தபடி, கனத்த சாமான் இழுத்துக் கொண்டுபோன அடையாளம் தென்பட்டது.

“நீங்கள் எதிர்பார்த்து வந்த சாமான் மறைந்து விட்டது போல் தெரிகிறது” என்றான் சோடே.

“ஆம்! மைக்கின் நடத்தையிலேயே எனக்கு சந்தேகமிருந்தது, ஏதோ ஒரு புதையலை காத்துக்கொண்டு கிடப்பதுபோல இவ்விடத்திலிருந்தான். போலீஸ் இக்கேஸில் தலையிடவே, இரகசியம் வெளியாகி விடுமென்று, அவசரமாக இங்குள்ள வஸ்தை அப்புறப்படுத்தி யிருக்கிறார்கள். யார் என்று தெரியவில்லை. இவ்வேலை பாஸோ செய்தானோ? அல்லது டாம் சொன்ன, பாஸோவைப் பின் தொடர்ந்தவர்கள் செய்தார்களோ? தெரியவில்லை. அதை ஆற்றின் வழியாக எடுத்துச் சென்றிருப்பதாக தெரிகிறது. நாம் கொஞ்சம் பிந்திவிட்டோம்” என்றார் ஷம்ஸ்.

“இன்று திடீரென்று இங்கிருந்ததை அப்புறப்படுத்த காரணமென்ன?” என்று சோடே கேட்க, “நான் இன்று மியூஸியம் போய் விசாரித்ததில், என்பேரில் கத்தி எறியப்பட்டது. இதனால் நாம் விசாரித்து வரும் வழி சரியான வழிபோல் தெரிகிறது. நாம் செல்லும் வழியே சென்றால், அவர்களை கண்டுபிடிக்க கூடுமென்று அவர்கள் அறிந்திருப்பதால், இவ்வாறு செய்திருக்கிறார்கள் போல் தெரிகிறது. அந்த மியூஸியத்தில் பேபர் செய்யும் மிஷின் விஷயமான சாமான்களதிகம் வைக்கப்பட்டிருந்தன. தற்போது நமது ஊரில் பேபர் செய்யும் மில் நடைபெறவில்லை. அந்த மியூஸியத்தில் தான் ஸ்டோன் வேலை செய்து வந்தான். சிலவேளை இவர்களெல்லாம் சேர்ந்து ஒரு பேபர் செய்யும் மில் திறக்க ஏற்பாடு செய்வதென்றால் இரகசியம் தேவையில்லை. இரகசியமாக ஒரு மிஷினில் பேபர் தயார் செய்வதானால், பணநோட் திருட்டுத்தனமாக அச்சிடவும் கூடும். அதற்கு இந்த இடம் தோதுவாக யிருக்கிறது. எதற்கும் விசாரித்தால் தெரியம்” என்று சொல்லி, இருவரும் அவ்வீட்டைவிட்டு வெளியில் வந்து அங்குள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றனர். அங்கிருந்த சார்ஜெண்டிடம் உத்தரவுபெற்று அங்கிருந்த டெலிபோன் மூலம் இன்ஸ்பெக்டர் பவுட்ஸிடம் பேசினார் ஷம்ஸ்.

“என்ன சமாச்சாரம்? புதிய விஷயங்கள் ஏதும் உண்டா?” என்று பவுட்ஸ் கேட்க, “ஒன்றுமில்லை என்பேரில் ஒரு கத்தி எறியப்பட்டது. அவ்வளவுதான்” என்றார் ஷம்ஸ்.

"என்ன! உங்கள்பேரிலா?" என்று கேட்க "ஆம்! ஆனல் காயம் ஒன்றும் படவில்லை. அதிருக்கட்டும். தற்போது ஏதாவது பொய் நோட்டுகள் நடமாடுகின்றனவா?" என்று ஷம்ஸ் கேட்டார்.

"அவ்வாறு ஒன்றும் கேள்விப்படவில்லையே, உமது மனதிலுள்ளதை விபரமாக சொல்லுங்கள்" என்று பவுட்ஸ் கேட்க, "வெஸ்ட்லேன்ட் பாங்க்கிலுள்ள நோட்டுகளை யெல்லாம் பரிசோதித்தால் நலமென்று நினைக்கிறேன்" என்ருர் ஷம்ஸ்.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? பாங்கில் உள்ள நோட்டுகளை எவ்வாறு பரிசோதிப்பது? நான் போய் பரிசோதித்து, அந்நோட்டுகளெல்லாம் நல்லதாகயிருந்தால் என் வேலைக்கு தகாது" என்ருர் பவுட்ஸ்.

"அது எனக்கும் தெரியும். பாங்கில் பொய் நோட்டுகள் யிருக்க முடியாதுதான். இருந்தாலும் அன்று பாங்கின் கதவுகளெல்லாம் திறக்கப்பட்டு, ஒன்றும் திருடப்படவில்லை என்று தெரிந்ததால், எனக்கு இந்த சந்தேக மேற்படுகிறது" என்ருர் ஷம்ஸ்.

"எப்படி யாயினும் என்னல் பாங்கின் நோட்டுகளை பரிசோதிக்க இயலாது" என்ருர் பவுட்ஸ்.

"சட்டப்படி போய் சோதிப்பதில் மிக கஷ்டங்களுண்டு. ஆனல் பர்க்லியி னிடமாக சிநேகித பாண்மையாக பேசி, செக் செய்ய முடியுமானல் சௌகரியமாக யிருக்கும். அவ்வாறு முயற்சித்து பாருங்கள்" என்ருர் ஷம்ஸ்.

"அவ்வாறு முயற்சிக்கிறேன். நீங்கள் அங்கேயே யிரும். நான் பர்க்லிக்கு போன் செய்து அவர் என்ன சொல்கிருரென்பதை தெரிவிக்கிறேன்" என்று பவுட்ஸ் சொல்ல, ஷம்ஸ் போனை வைத்துவிட்டு அங்கேயே உட்கார்ந் திருந்தார். கால்மணி நேரம் சென்றபின், டெலிபோன் மணி அடிக்க, ஷம்ஸ் எடுத்து கேட்டார்.

"பர்க்லி மறைந்து விட்டார். நேற்று மாலை பாங்க்கை விட்டு போனவர் திரும்பி வரவில்லையாம். அவர் வீட்டிற்கும் போக வில்லையாம்" என்ருர் பவுட்ஸ்.

"அவரைத் தேட முயற்சியுங்கள். எனது அஸிஸ்டென்ட் சோடே சொன்னதிலிருந்து, பர்க்லி ஸ்டோன் வீட்டிற்கு போயிருக்க கூடுமென்றும், அங்குள்ள மேரி அதை மறைத்து பேசுவதை போலும் தெரிகிறது அதையும் விசாரிக்கவும்" என்று ஷம்ஸ் சொல்ல, அவ்வாறே முயற்சிப்பதாக பவுட்ஸ் சொல்லிபோனை வைத்தார்.

32

பிறகு ஷம்ஸ் சார்ஜெண்ட்டிடம் "இன்று மைக்கை பார்த்தீரா?" என்று கேட்டார்.

"ஆம்! பார்த்த ஞாபகமுண்டு. அந்த பிரிஸ்டன் ஹோட்டல் பக்கம் போனது போல் தெரிந்தது. ஏதாவது குடிக்க போயிருக்கலாம்" என்றான் சார்ஜெண்ட்.

உடனே ஷம்ஸ் சோபேவுடன் பிரிஸ்டன் ஹோட்டலுக்கு போனார்கள். அங்கு ஜனங்கள் சிரித்துக் கொண்டும், பேசிக் கொண்டும், குடித்துக் கொண்டுமிருந்தார்கள். இவர்கள் அங்கு ஒரு மூலையிலுள்ள மேஜையின் முன் உட்கார்ந்தார்கள். அந்த ஹோட்டல் சொந்தக் காரன் இவர்களிடம் வந்தான். அவனிடம் "மைக் இங்கு வந்தானா?" என்று ஷம்ஸ் கேட்டார்.

"இங்கிருந்தான். 5 நிமிஷத்திற்கு முன் தான் போனான். உங்களுக்கு என்ன தேவை?" என்றான்.

"எங்கள் இருவருக்கும் பால் கொண்டுவா. அவன் தனியாகவா போனான்?" என்று ஷம்ஸ் கேட்க, "ஆம்! தனியாகத்தான் போனான்" என்றான்

அந்த ஹோட்டலுக்கு பின் புறத்தில் ஒரு வழி யிருந்தது. அவ்வழியாகவும் சிலர் ஹோட்டலுக்கு வருவதுண்டு. ஷம்ஸ் ஹோட்டலின் முதலாளியுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, பின் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. "இங்கு யாரும் வரலாம். இது ஹோட்டல் தானே, தட்ட வேண்டிய தவசியமில்லை. உள்ளே வா" என்று ஹோட்டல் முதலாளி சப்தமிட்டான்.

மறு முறையும் தட்டும் சப்தம் கேட்டது. "ஏதாவது மாடு வந்து கதவை முட்டுகிறதா" என்று சப்தமிட்டான் ஹோட்டல் முதலாளி.

"போதும்" என்று சொல்லிக் கொண்டே ஷம்ஸ் ஓடிப்போய் கதவை திறந்தார். ஒரு மனிதன் அக்கதவில் சாய்ந்து கையால் கதவின் கைப்பிடியை பிடித்தவா றிருந்தான். அவன் வாயிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. கதவு திறந்ததும் ஷம்ஸ் அவனைப் பார்த்து, பிடிப்பதற்குள் கீழே விழுந்தான். "ஐயோ! கொலையுண்டு இறந்து கிடக்கிறானே!" என்று பதறி சொன்னான் ஹோட்டல் முதலாளி.

அத்தியாயம் 18

இன்ஸ்பெக்டர் பவுட்ஸ் சிம்ஸன் என்ற பெயருடைய சார்ஜெண்டைக் கூப்பிட்டுக் கொண்டு பர்க்லியின் வீட்டுக்குப் போனார்.

பர்க்லி பட்டணத்திற்கு வெளிப்புறத்தில் கட்டப் பட்டிருந்த ஒரு பங்களாவில் வசித்து வந்தார். பர்க்லியுக்கு கலியாணமாகவில்லை. அவருக்கு ஹட்டன் என்னும் ஒரு வேலைக்கார னிருந்தான். அந்த பங்களாவில் இவர்க ளிருவருமட்டும் இருந்து வந்தார்கள். இன்ஸ்பெக்டர் பவுட்ஸும் சார்ஜென்ட் சிம்சனும் போய் இருக்கும் பொழுது அந்த பங்களாவில் ஹட்டன் மாத்திர மிருந்தான். அந்த வேலைக்காரன் ஒரு கால் யுத்தத்தில் இழந்ததால் ஒரு பொய் காலைக் கட்டிக் கொண்டிருந்தான். அதை அறிந்த இன்ஸ்பெக்டர் அவனை ஒரு நாற்காலியை காட்டி அமரும்படி சொன்னார். "பர்க்லி எங்கே—எப்பொழுது வெளியே போனார்?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"நேற்று மத்தியானம் சாப்பிட்டு விட்டு போனவர் இன்னும் வீடு திரும்பவில்லை" என்றான் ஹட்டன்.

"நேற்று மத்தியானம் இங்கிருந்து போகும் பொழுது அவர் சந்தோஷமாக விருந்தாரா? எவ்வாறு இருந்தார்?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டதற்கு "அன்று பாங்கில் நடந்த விஷயத்திற்குப் பின் கவலையினால் அவர் முகம் சோர்ந்திருந்தது. நேற்று மத்தியானமும் அவ்வாறே இருந்தார்" என்றான் ஹட்டன்.

"உனக்கு ஸ்டோன் தெரியுமா—" என்று இன்ஸ்பெக்டர் கேட்க, "இறந்தானே அவன்தானே, எனக்குத் தெரியும், இங்கு கூட வந்திருக்கிறான். பர்க்லியும் அவனும் அதிக நேரம் பேசிக் கொண்டிருப்பார்கள்." என்றான்.

"அவன் யாரென்று தெரியுமா?" என்று கேட்க, "தெரியும் கதை எழுதுபவன். அவன் எழுதிய ஒன்றிரண்டு புஸ்தகங்களை பர்க்லி எனக்கு படிக்க கொடுத் திருக்கிறார்" என்றான் ஹட்டன்.

"நீ சொல்வதிலிருந்து வேலைக் காரனுக்கும் மானேஜருக்கும் சிநேகித நட்பு இருந்ததாக தெரிகிறது" என்றார் பவுட்ஸ்.

"மத்தியானம் எங்குப் புறப்பட்டார் தெரியுமா?" என்று கேட்க "தெரியாது, பாங்குக்கு போயிருப்பாரென்று நினைத்தேன். ஏன் கேட்கிறீர்கள்? நீங்கள் ஸ்டோனைப்பற்றி விசாரிக்க வந்தீர்களென்றல்லவா நினைத்தேன்" என்றான் ஹட்டன்.

"பர்க்லீ மறைந்து விட்டார். இதுவரை மறைந்து விட்டதாக தெரிகிறது" என்றார் பவுட்ஸ்

"மாலை 6 மணிக்கு போன் செய்தாரே" என்று ஹட்டன் சொல்ல, "போனில் அவர் பேசினாரென்று உனக்கு எப்படி தெரியும்? என்ன சொன்னார்?" என்று கேட்க, "இரவு வருவதற்கு

லேட்டாகும். இரவு சாப்பாடு தேவையில்லை என்றார். ஆனால் அவர் பேசினதாக நினைத்தேன். நீங்கள் இப்பொழுது கேட்டதில் எனக்கு சந்தேகமேற்படுகிறது. அவர்போனில் பேசினாரோ அல்லது வேறு யாரும் அவரைப்போல் பேசினாரோ என்னால் சொல்ல முடியாது” என்றான் ஹட்டன்.

ஹட்டனுக்கு தெரிந்ததை சொல்லி விட்டானென்று எண்ணி இன்ஸ்பெக்டரும் சார்ஜென்ட்டும் அங்கிருந்து பிறப்பட்டு, மேரியின் வீட்டிற்கு போனார்கள். கதவைதட்டியதும் கொஞ்சநேரம் சென்றபின் கதவை மேரி திறந்தாள்.

“உன்னிடம் சில விஷயங்கள் கேட்டறிய வேண்டும். உள்ளே வரலாமா?” வென்று கேட்க இருவரையும் அவள் ஒரு அறையினுள் கூப்பிட்டுச் சென்றாள்.

“நேற்று மாலை பர்க்லீ இங்கு வந்ததாக அறிந்தேன். அவ்விஷயமாக பேச வந்துள்ளோம்” என்று பவுட்ஸ் சொல்ல, “யார்? பர்க்லீயா? யாரோ ஒருவன் வந்து தங்கமிடம் வேண்டுமென்று கேட்டான்” என்றாள் மேரி.

“பாங்க் மானேஜர் பர்க்லீயைப்பற்றி கேட்கிறேன்” என்றார் பவுட்ஸ்.

“பாங்கிலிருந்தா? ஓஹோ பாங்க்!” என்றாள்.

“மேரி! இங்கு தங்கியிருந்த ஸ்டோனை பாங்கில் வேலைக்கு அமர்த்தியவர்” என்று மறுமுறை சொல்ல “ஆம்! பாங்க் மானேஜர் வந்தார். நல்ல மனிதர். ஸ்டோனின் சிநேகிதர். ஸ்டோன் இறந்ததைப்பற்றி மிக வருத்தமடைந்தார்” என்றாள் மேரி.

“இவ்வீட்டிற்குள் வந்தாரா?”

“ஆ! வந்தாரா? எனக்கு ஞாபகமில்லை. இன்று எவ்வளவோ பேர்கள் வந்தார்கள். வந்தவர்களெல்லாம் ஏதேதோ கேள்விகள் கேட்டார்கள். என் தலை சுற்றுகிறது” என்றாள்.

“உள்ளே வந்தாரா?”

“ஆம்! ஆம்! வந்ததாக நினைக்கிறேன்”

“ஸ்டோனின் அறைக்குப் போனாரா?”

அவள் பயத்தால் பேசமுடியாமல் திகைத்து நின்றாள். பின்பு “ஆம்! போனார்” என்றாள்.

“ஸ்டோனின் அறை எது?” என்று கேட்க அவர்களிருவரையும் ஸ்டோனின் அறையைத் திறந்து அதனுள் அழைத்துச்

சென்றாள். அந்த அறையைப் பார்த்தபின் "பர்க்லீ எப்பொழுது திரும்பிபோனார்?" என்று கேட்க, "எனக்கு ஞாபகமில்லை. நேற்றுமாலையே திரும்பியிருப்பார்"

"திரும்பிபோய் இருப்பாரா! அது எப்படி உனக்குத் தெரியாமல்?"

"நான் அவரை இவ்வறையில் விட்டுவிட்டு போனேன். இவரைப்பற்றி மறந்து விட்டேன். கொஞ்சம் நேரம் சென்றபின், ஞாபகம் வந்து மேலேபோய் பார்க்க இவரைக்காணோம் ஸ்டோனின் சாமான்களை அவரிடம் ஒப்படைக்க வேண்டும என்று ஸ்டோன் எழுதியதாக ஒரு கடித்தையும் காண்பித்தார்"

"இன்னும் எத்தனை பேர் இவ்வீட்டில் தங்கிருக்கிறார்கள்?"

"ஒரே ஒரு ஆள். அவர்பகலில் இங்குஇருப்பதே இல்லை. சில இரவுகளிலும் இருப்பதேயில்லை"

"அவர் பெயர் என்ன?"

"பிரவ்ன்"

"அவர் இன்று வருவாரா?"

"இல்லை நாளை வருவார்"

"இன்று எங்கிருக்கிறார் தெரியுமா?"

"தெரியாது"

மேரி தனது அறையிலிருக்கும்போது பவுட்ஸ் கேள்விகள் கேட்கும்போது மிகபயந்தவளாக நடுடுங்கி பதிலளித்தாள். ஆனால் மாடியிலுள்ள ஸ்டோனின் அறைக்கு வந்தபின் பயமின்றி தைரியமாக பதிலளித்து வந்தாள்.

"நாங்கள் கதவை தட்டும்போது நீ எங்கிருந்தாய்" என்று கேட்க "சமயலறையில்." திடீர் என்று பவுட்ஸ் எதையோ நினைத்துக்கொண்டு "உனது புருஷர் உயிருடன் இருக்கிறாரா?"

"எனக்குத் தெரியாது. தெரிய வேண்டிய அவசியமில்லை"

"அப்படியானால் இவ்விட்டில் வசிப்பதில்லையா?"

"இல்லை. என்னை சில வருஷங்களுக்குமுன் விட்டுவிட்டு போய் விட்டார். அதுவும் நல்லதாயிற்று. அவருடைய உதவியில்லாமலேயே நான் நல்லவிதமாக யிருக்கிறேன்?" என்றாள். திடீரென்று தட்டும் சப்தம் கேட்டது. அச்சப்தம் எங்கிருந்து வருகிறதென்று மேரிக்குத் தெரியும். அவள் உடனே அங்குள்ள படிக்கட்டின்

சுவற்றில் ஓங்கி தட்டி "இது அடிக்கடி ஏற்படுகிறது. பக்கத்து வீட்டில் எதையோ தட்டிக் கொண்டிருக்கிருர்கள்" என்று கோப மாக சொன்னள்.

"பக்கத்து வீட்டில் யார் இருக்கிறது?"

"எனக்கு தெரியாது"

"வீட்டிலுள்ள மற்ற அறைகளை எல்லாம் பார்க்கவேண்டும்" என்று பவுட்ஸ்கேட்க அவள் எல்லா அறைகளையும் காண்பித்தாள். பார்த்தபின் மாடியை விட்டு கீழ் இறங்கும் சமயத்தில் தெருகதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. சார்ஜென்ட் கதவை திறந்தார். தங்களது போலீஸ் காரின் டிரைவர், ஜான் பாங்கில் காத்துக் கொண்டிருப்பதாக அந்த தெருவின் ரோந்து கான்ஸ்டேபிள் வந்து தெரிவித்ததாக சொன்னன். உடனே பவுட்ஸாம் சிப்ஸனும் அவ் வீட்டை விட்டு வெளியே வந்தார்கள். டிரைவரிடம் "அந்த கான்ஸ் டேபிள் எங்கே?" என்று பவுட்ஸ் கேட்டார். அந்த தெருவின் கோடியில் இருப்பதாக டிரைவர் சொல்ல இருவரும் காரில் ஏறிக் கொண்டு அந்த கான்ஸ்டேபிளிடம் சென்ருர்கள். அங்கு கான்ஸ்டேபிளிடம் மேரி வீட்டை சுற்றி காண்பித்து "அந்த வீட்டை ஜாக்கிரதையாக கவனித்துக் கொண்டிரு, நான் போய் சீக்கிரமாக இந்த வேலைக்கு இன்னும் ஒருவனை யனுப்புகிறேன். அதுவரை நீ அவ்வீட்டைப் பார்த்துக் கொண்டிரு அவ்வீட்டி லுள்ள மேரி அவ்வீட்டை விட்டு வெளியே போனல் அவள் அறி யாமல் பின்துடர்ந்து போ" என்று சொல்லி விட்டு பாங்குக்கு போனர். அங்குஜான் காத்துக் கொண்டிருந்தார்.

"இங்குள்ள நோட்டுகளைப் பற்றி சந்தேகப் படுவதாக சமாச் சாரம் உங்களுக்கு அனுப்பி யிருந்தோமே கிடைத்ததா?" என்று பவுட்ஸ் கேட்டார்.

"சமாச்சாரம் தெரியவந்தேன். ஆனல் விளங்கவில்லை" என் ருர் ஜான்.

"பர்க்லியை சந்திக்க முடியவில்லை, ஆதலால் உங்களை வரச் சொன்னேன். தயவு செய்து பண அறையை திறந்து பார்க்கிறீர் களா?" என்று பவுட்ஸ்கேட்டார். ஜான் சம்மதித்து அவர்களை யழைத்துக் கொண்டு போய் பண அறையை திறந்து காண்பித்தார். "இந்த புதிய நோட்டுகளை சிலதை மாற்றி இருக்கக்கூடும் என்று ஷம்ஸ் நினைக்கின்ருர் ஆதலால் நீங்கள் ஒன்றிரண்டு கட்டுகளை எடுத்துப் பாருங்கள்" என்ருர் பவுட்ஸ் ஜான் ஒரு பவுண்ட் நோட்டு கள் உள்ள கட்டு ஒன்றை எடுத்து அதிலிருந்து ஒரு நோட்டை எடுத்து அதை நன்ருக கவனித்தார்.

"இது நல்ல நோட்டாக தெரிகிறது. இது பொய் நோட் என்றால் இதைச் செய்தவன் மிகவும் ஒழுங்காக செய்திருக்கிறான் இதை கண்டுப் பிடிக்க முடியவில்லை"

"நம்பர் மூலமாக கண்டுப் பிடிக்க முடியாதா?" என்று பவுட்ஸ் கேட்டார். "இதே நம்பர் இன்னொரு நோட்டி லிருந்தால் தான் கண்டுப் பிடிக்க முடியும். இந்த நோட்டை நீங்கள் தான் பாருங்கள். இதை எவ்வாறு பொய் நோட்டு என்று சொல்வது? ஆனால் காகிதம் செய்யக் கூடிய நிபுணரிட மிதைக் காண்பித்தால் அவனால் சொல்லக் கூடும் என்று நினைக்கிறேன்" என்றார் ஜான்.

"காகிதம் செய்யக் கூடியவனை நான் எங்கு தேடுவது? இந்த ஊரில் காகிதம் செய்யும் தொழில் அடியோடு எடுப்பட்டு விட்டது. கடைசியாக இருந்த சிறிய மில்லும் எடுபட்டு 4-5 வருஷங்கள் ஆகின்றன" என்றார் பவுட்ஸ்.

"மியூஸியத்தில் விசாரித்தால் தெரியும்" என்று சார்ஜென்ட் சொன்னார்.

அப்பொழுது ஜான் பவுட்ஸிடம் "நீங்கள் டாம் என்னும் ஒருவனைப் பிடித்து வைத்திருக்கிறீர்கள் அல்லவா?" என்று கேட்டார்.

"ஆம்" என்று பவுட்ஸ் திடுக்கிட்டு ஆச்சரியத்துடன் சொன்னார்.

"அந்த டாம், டவ்டன் பேபர்மில்லில் கடைசியாக மூடும் வரை வேலை செய்து வந்தான். அவனால் இதைக் கண்டுப்பிடிக்க முடியலாம்" என்றார் ஜான்.

"ஆனால் அவனிடம் தற்போது கேட்பது எனக்குப் பிடிக்கவில்லை" என்று பவுட்ஸ் சொல்லிக் கொண்டிருக்கும் போது ஜான் அந்தக் கட்டிலிருந்து இன்னொரு நோட்டை எடுத்துப் பார்த்து திகைத்து "இதோ பார் இதில் மை யழிந்திருக்கிறது, இது சரியல்ல" என்று சொல்லி அந்த நோட்டை பவுட்ஸிடம் கொடுத்தார்.

அவர் பார்த்து "இதற்கு கீழிருந்த நோட்டின் நம்பர் காய்ந்திராம லிருப்பதால் அந்தமை இதில பட்டிருக்கிறது" என்றார்.

"ஆம் நீங்கள் சொல்வது சரிதான். இது பொய் நோட்தான். இதை செய்தவன் மிக திறமையாக செய்துள்ளான" என்றார் ஜான்

"பொய் நோட்டுகள்! ஷம்ஸ் சொன்னதுதான் சரியாயிற்று" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார் பவுட்ஸ்.

மேரி வீட்டைக் கவனித்துக் கொண்டிருந்த கான்ஸ்டேபி ளிடம் சாதாரண உடையணிந்த இன்னொரு போலீஸ் கான்ஸ் டேபிள் வந்து "ஏதும் விசேஷமுண்டா" என்றுக் கேட்டான்.

"அந்த வீட்டை விட்டு யாரும் வெளியே வரவில்லை. அதற்கு பக்கத்து வீட்டி லுள்ளவர்களெல்லாம் சினிமா போயிருக்கிறார் கள். வாரத்தில் ஒருநாள் கட்டாயம் சினிமா போவது அவர்களின் வழமை" என்றான் அந்த தெருவின் ரோந்து கான்ஸ்டேபிள்.

"மறு பக்கத்து வீடு?"

"அந்த 20-ம் நம்பரா? சில வாரங்களாக காலியாக விருக் கிறது" என்றான் ரோந்து கான்ஸ்டேபிள்.

"இனி நான் கவனித்துக் கொள்கிறேன். நீ உனது வேலை யைப்பார்" என்று வந்தவன் சொல்ல, ரோந்து கான்ஸ்டேபிள் தனது ரோந்து வேலையாகச் சென்றான். (தொடரும்)

இன்ஷூரன்ஸ் இன்ஸ்பெக்டர்: ஏன் 98 வயதான ஒருவருக்கு நீ இன்ஷூரன்ஸ் பாலிஸி எழுதினாய்?

புதிய ஏஜண்ட்: கணக்கைப் பார்த்தேன். ஒவ்வொரு வருஷமும் இறந்து போனவர்களிலே 98 வயதிலே இறந்து போறவுங்க குறைவாக இருந்தது.

மழை அதிகமாக கொட்டிக் கொண்டிருந்த ஒரு இரவில் டாக் டர் ஒருவரை வெகு தூரத்தில் உள்ள ஒரு குடியானவன் வீட்டுக்கு அழைக்கப் பட்டபோது முதல் சற்று தயங்கினார். பிறகு உதவி செய்ய வேண்டுமென்ற ஆசையினால் தான் வர ஒப்புக் கொண்டு மழையில் நடந்து அந்த குடியானவன் வீட்டுக்குப் போனார். டாக்டர் அங்கு போனதால் அங்கு ஒரு குழந்தை காப்பாற்றப் பட்டது. அந்த குழந்தை இங்லாந்தின் மாஜி பிரதம மந்திரியான லாயிட் ஜார்ஜ்.

தெய்வீகக் காதல்.

(மாஸ்டர் கமல் பாபு)

(தொடர் கதை 5-வது பகுதி)

செல்வ சர்தாஜ் அவர்கள்,

எதிர் பாராமல் வரும் இக்கடிதம் தங்கள் மனதிற்கு அதிக ஆச்சரியத்தை அளிக்குமென்பதில் ஐயமில்லை. ஆனாலும், நான் இவ்வளவு துணிந்து எழுதுவதற்கு காரணம், தங்கள் கற்கண்டான காதலின் கட்டளைதான்.

நான் அன்று குஷ்தர்ஜான் வீட்டுக்கு விஜயம் செய்தபோது தங்களை காணும் பாக்கியத்தை பெற்றேன். பார்த்த க்ஷணத்தில் என் மனம் தங்கள் வசமாயிற்று. தங்களுக்கே மாலை யிடவேண்டு மென்ற முடிவுக்கு வந்து விட்டேன். காதலியின் வேதனையை அறிந்த தாங்கள் என் காதலை நிருகரிக்க மாட்டீர் என்ற நம்பிக்கை யில் என் உடல் உயிர் பொருள் ஆக மூன்றையும் தங்கள் காலடியில் காணிக்கையாக கொட்டி இருக்கிறேன். ஆகவே, அடியாள்மீது அன்பு கொண்டு அஸர்தொழுகைக்கு வரும்போது கடிதம் கொடுக் கும் காஜா இடமே இதற்கு பதில் கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்

தங்கள் அன்பை நாடி நிற்கும் அபலை

ஹபிபுன்னிஸா.

"பேஷ்பேஷ், கடிதம் கால்வாய் போலிருந்தாலும் கருத்துகள் கடலளவில் கொட்டி விட்டாயே" நான் கடிதம்படித்து முடித்ததும் இர்ஷாத் சொன்னாள்.

"புகழ் அப்புறமிருக்கட்டும், முதலில் இக்கடிதம் புறப்படும் மார்க்கம்செய்" என்று நான் சொன்னதும், என் தங்கை ரவுனகுன் னிஸாவை அனுப்பி காஜாவை அழைத்து வரசெய்து அவன் வந்த ததும், என் கடிதத்தை அவனிடம் கொடுத்து, ஜொஹர் தொழு கைக்காக ரஜாக்பாக்ஷா உஸ்மான்பேட் மஸ்ஜிதுக்கு வருவார், அவரிடம் இதை கொடுத்துவிட்டு எதுவும் பேசாமல் ஓடிவந்திட வேண்டுமென்றும் இவ்விஷயமாக யாரிடமும் ஒன்றும் சொல்ல கூடாதென்றும் பயமுறுத்தியும் தாக்கித் செய்தும் அனுப்பினாள் இர்ஷாத் பேகம்.

கொஞ்ச நேரத்தில் கட்டளையை நிறைவேற்றி விட்டதாக வந்து சொன்ன காஜா இடம் நீ ஸ்கூலுக்குபோய் நேரே இங்கே வரவேண்டும். உனக்காக டீ பிஸ்கட் எல்லாம் இங்கே வைத்திருப்பேன். ஸ்கூல் விட்டதும் ஓடிவர வேண்டுமென்று மறு கட்டளையிட்டு அனுப்பினுள்.

நாமும் ஜொஹர் தொழுதுக் கொண்டு அறைக்குள் போகாமல் ஹாலில் ஜன்னதுன்னிஸா நூர்ஜஹான் இவர்களுடன் சரசமாடிக் கொண்டிருந்தோம்.

சாயிந்திரம் காஜாவும் வந்தான். இர்ஷாத் சொன்னபடி அவனுக்கு டீ பிஸ்கட்களை கொடுத்து "இப்பவும் அந்த மஸ்ஜித்கிட்டே நில்லு. அசர் தொழுக வரும் ரஜாக்பாக்ஷா சீட்டி கொடுப்பார் அதை யாருக்கும் காண்பிக்காமல் என்னிடம் கொண்டு வந்து கொடு" என்று சொல்லி அனுப்பினுள்.

அவன் போனதும் என் மனதில் ஏதேதோ எண்ணமிட்டு கொண்டு அமைதி அற்றுமிருந்தது. அந்நேரத்தில் ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு ஒரு யுகமாக தோன்றியது. கடைசியாக காஜாவும் பதில் கடிதத்துடன் வந்தான். அதை இர்ஷாத் வாங்கி கொண்டு "எதுவும் கேட்டாரா?" என்று கேட்டாள்.

"இர்ஷாத் எங்கே இருக்கு என்று கேட்டார், ஹபீப் ஆபா வீட்டிலிருப்பதாக சொன்னேன்" அவன் பதில் சொன்னுன்.

"சரி நீ போய் மக்ரிபுக்குவா" என்று சொல்லிவிட்டு இருவரும் அறைக்குள் வந்து பழையபடி கதவு பூட்டி விட்டோம்.

"ஹபீப்! இப்போது நான்தான் ரஜாக்பாக்ஷா. நீ எழுத்தால் எழுதிய கடிதத்திற்கு நான் வாயால் பதில் சொல்கிறேன். கவனமாக கேள்" என்று இர்ஷாத் கடிதத்தை படிக்கலானுள்.

அன்பு மிக்க ஹபீபுன்னிஸா,

உம் கடிதம் கிடைத்தது, உன் காதல் கன்னியமான தென்றும், அலையில்லா கடலில் நிலையில்லா கப்பல்போன்றது.

நீர் செல்வத்தோடு சிறப்புடன் விளங்கும் சிங்காரி, நான் சோற்றுக்கேடாக சிறுமையில் வாடும் சோம்பேறி; நீ பணமென்ற பக்கபலத்தால் ஆகாயத்தில் பறக்கும் பக்ஷி, நான் வறுமை என்ற குட்டையில் வாடி நிற்கும் வாத்து; நீர் இன்பத்திலே பிறந்து இன்பத்திலே வளரும் இளவரசி, நான் துன்பத்திலே பிறந்து துன்பத்திலே வளரும் துர்மார்க்கன்; நீர் மாடி வீட்டில் மணம் குளிர்ந்திருக்கும் மங்கை, நான் மலைமீது வெய்யில் வேககூடிய

வேங்கை; நீர் உலகம் புகழக்கூடிய செல்வ சிந்தாமணி, நான் உலகம் இகழ கூடியவனுகிய சிறுமையின் சிகாமணி; நீர் பணத்தின் பெருமையால் பாலை வனத்தையும் நந்தவன மாக்கி நடனமாடும் மயில், நான் ஆண்டவனேயே துணையாக கொண்டு ஆலமரத்தடியில் ஆடும் அணில்; எவ்வளவு எழுதினுலும் என்கருத்து ஒன்றுதான். அதாவது நீர் நெருப்பு, நான் நீர்; எனவே சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒன்று சேராது.

ஆகையால் என்மீது நீர்கொண்டுள்ள ஆசையும் ஆர்வத்தையும் அடியோடே அழித்து உம் அந்தஸ்திற்சேற்ற ஆடவனே மணம் செய்து மனம்குளிர நீர் இருக்கவேண்டு மென்பதே என் ஆசை.

இப்படிக்கு
உம் நலத்தை நாடும்
ரஜாக்பாஷா

"அப்படியானல் என் காதல் கானல் நீராகத்தான்போக வேண்டுமா இர்ஷாத்?" கலங்கியபடியே அவளை கேட்டேன்.

"அதற்குள் நம்பிக்கையை நழுகவிடாதே ஹபீப், முதல் கடிதத்தின் தோல்விதான் பின் கடிதத்தின் வெற்றி. நான் எழுதி கொடுக்கிறேன் அதேபோல் உன்கையால் எழுதி அனுப்பு. கடவுள் கிருபையால் அவசியம் உன் காதல் கைகூடும்" என்று அவளே ஒரு கடிதம் எழுதி கொடுத்தாள்.

என் நலத்தை நாடும் நாயகா,

தங்கள்பதில் கிடைத்தது. தாங்கள் உண்மையில் என் நலத்தை நாடுவதாய் இருந்தால் தாங்கள்தான் எனக்கு நாயகராக இருக்க வேண்டும். இல்லையேல் நான் நாய்போல்தான் சாகவேண்டும். தாங்கள் எழுதியபடி நான் நெருப்பு, தாங்கள் நீர்தான். என்றுலும் அதோ பாருங்கள், ஆம், அந்த புகைவண்டியைதான் குறிப்பிடுகிறேன். அதில் நெருப்பும் நீரும்தான் கலந்திருக்கிறது. இந்த நெருப்பும் நீரும் கலந்து தண்டவாளத்தின் மீது ஓடும்போது உலகமே இதன்முன் தலைசாய்க்கிறது. மேலும் நம் பெயர்களை கொஞ்சம் நோக்குங்கள், ரஜாக், ஹபீப், எவ்வளவு இனிமையான பெயர்கள். இதில் தங்கள் பெயரின் முதல் எழுத்து ர, என்பெயரின் கடைசி எழுத்து ப், இரண்டும் சேர்த்தால் ரப், (அல்லா) ஆகிறது. இதற்கு நேர்மாறுக என்பெயரின் முதல் எழுத்து ஹ, தங்கள் பெயரின் கடைசி எழுத்து க், இரண்டும் சேர்த்தால் ஹக் (உண்மை) இது இரண்டு சொற்களும சேர்த்தால், ரப்ஹக் (அல்லா உண்மையாக இருக்கிருன்) என்ற அரபி வாக்கியம் வெளியாகிறது.

அவ்வளவு ஏன்? தாங்கள் எழுதியபடி நான் பணம், பட்டம் பதவி, இதுகள்மீது பாசம் கொண்டிருந்தால் தங்கள் ஏழ்மையை அறிந்து தங்களை நேசிக்கவேண்டிய அவசியமிராது. நான் தங்கள்மீது கொண்டுள்ளகாதல் தூய்மையானது, தெவிட்டாதது, தடைபடாதது, தெய்வீகமானது.

ஆகவே, மெஹ்ருபாணிசெய்து என் வேதனையை அதிக படுத்தாமல் அவசியம் தங்கள் வீட்டிலிருந்து யாரையாவது உடனே அனுப்பி என்னை கேழ்க செய்யுங்கள். கேட்டும் என் பெற்றோர்கள் தங்களுக்கு என்னை கொடுக்க மறுத்தால், என் நலனுக்காகவும் என் உரிமைக்காகவும் பெற்றோரிடம் போர்தொடுக்கவும் உருதிகொண்டுள்ளேன். கன்னிபெண்ணுக்கு இஷ்டமில்லா கணவனுக்கு கல்யாணம் செய்ய நம் பரிசுத்தமான மார்க்கம் இடம் தரவில்லை என்பதை நன்றாக அறிந்திருக்கிறேன். இந்த மார்க்க சட்டபடி என் பெற்றோர்கள் தங்களையின்றி வேறுயாருக்கும் கல்யாணம்செய்து தரமாட்டார்கள். எனவே, கரைகாணுமல் தவிக்கும் என் காதல் கப்பலை கருணையுடன் கல்யாண கரையில் சேர்ப்பீர்கள் என எதிர் பார்க்கிறேன்.

தங்களுக்கென்ற உயிர்வாழும் உத்தமி.

ஹபீபுன்னிஸா.

“இர்ஷாத்! எவ்வளவு அறிவாக அரபி வாக்கியத்தை எல்லாம் ஆராய்ந்து எழுதிவிட்டாய்” நான் ஆச்சரியம் ததும்ப கேட்டேன்

“ஆச்சரியபடுவாய் அப்பாலே, முதலில் அதேமாதிரி எழுதி கொடு. மக்ரிப்தொழுகைக்கு அல்லது இஷா தொழுகைக்கு வரும் போது கொடுக்கச் சொல்லுகிறேன்”

“ஆமா இரவில் நீ போய்விட்டால் இதற்கு பதில் எனக்கு எப்படி வரும்?”

“பதில் எழுதும்படி இதில் குறிப்பிட வில்லை. என்கிலும் நாளை காஜாவை அனுப்புகிறேன். பதில்கிடைத்தால் அவனிடமே உனக்கு அனுப்புகிறேன்”

அன்று மக்ரீப்தொழுகைக்கு பின் இர்ஷாத் தன்வீட்டுக்கு போய் விட்டான். மறுநாள் அஸர்தொழுகபோகும்போது காஜா ஒரு கடிதம் கொண்டுவந்து கொடுத்தான். நான் எழுதிய கடிதத்திற்கு பதில் என்று அவர் கை எழுத்து சாட்சி சொன்னது. அதைபடிக்க அதிக ஆவலாக இருந்தது என்றாலும் அப்போதே படிக்காமல் அஸர் தொழுதுக்கொண்டு அதே இடத்திலிருந்து படித்தேன்.

என் நம்பிக்கையின் ஜோதியான நாயகி,

உன் இரண்டாவது கடிதம் பார்த்து என்னையும் அறியாமல் உன்மீது எனக்கு ஆசை பிறந்தது. உன் குணலட்சணமும் கொள்கையும், குஷ்தர்ஜான், சமிதாபானு இவர்கள் மாறலாய் அறிந்து அளவில்லாத ஆனந்தம் கொண்டேன். உன் இஷ்டப்படி இன்ஷா அல்லா நாளை உன்னை கேட்க்க ஒரு ஆளை அனுப்புகிறேன். அன்பு மிக்க ஆண்டவன் நம் ஆவலை அதிவிரைவில் பூர்த்தி செய்வானாக ஆமீன்.

உன் நலத்தை நாடும்
ரஜாக்பாஷா.

"ஆ! நான் தங்கள் நம்பிக்கையின் ஜோதியா? நான் அவ்வளவு புகழுக்குரியவளா? தங்களுக்கு என்மீது இவ்வளவு அன்பு பிறந்ததா? என்னை போல் பாக்கிய சாலிகளும் யாராவது இருக்கிறார்களா? ஆண்டவனே நீ அடியார்கள் மீது வைத்திருக்கும் அன்புக்கு இரவெல்லாம் தொழுது பகலெல்லாம் நோன்பு வைத்தாலும் ஈடாகுமா?" இவ்விதமாக என் மனம் நினைத்தபோது அப்போதே நான்கு ரகாயத்து ஷுக்ரூ தொழுகையும் தொழ செய்தது.

மறுநாள் ஒருவர் வந்து ரஜாக் பாஷாவுக்காக என் தாயாரிடம் பெண் பேசினாள். பணத்தை பிரதானமாக நினைக்கும் என் தாய், "அவன் எங்கேம்மா போய் சமபாதிக்கப் போகிறான். அவன் கப்பா ரூபா அனுப்புகிறார், அவன் சிலவு செய்கிறான் அப்பா இருக்கும் வரையில் தள்ளிக்கிட்டு போய் விடும். அதற்கு பின் எப்படிம்மா போகுவது? மேலும் என் இரண்டு பெண்களையும் அறுபது சவரன் ஹார் போட்டு கட்டிகிட்டு போனார்கள். அந்தமாதிரி ஹார் போட இவர்களால் முடியுமா?"

அவசியமில்லாததும், அனாவசிய மாகவும் அர்த்தமற்றதாகவும் அழிய கூடிய பொருளுக்காக அல்லாவையும் மறந்து அறுபது சவரன் ஹார் போட்டதாக பொய் சொல்லி அனுப்பி விட்டாள். இதை கேட்ட நான் சுய உணர்வற்று சுவரில் சாய்ந்தேன்.

"ஹமீப் ஏன் இப்படி கண்ணீர் வடித்து நிற்கிறாய்?" அங்கு வந்த என் பெரிய அக்கா நஜ்முன்னிஸா கேட்டபோது சுய உணர்வு பெற்றேன்.

"அக்கா உண்மையை சொல்லு, மைதுனர் உங்களுக்கு அறுபது சவரன் ஹார் போட்டாரா?" அவளை பிடித்து குலுக்கியபடி கொஞ்சும் மொழியில் கெஞ்சி கேட்டேன்.

"யாரும் ஹார் கொண்டு வந்து போடவில்லை. கொடுக்காத குறைக்குதான் அப்படி சொன்னார் போலும்-அதற்காக நீ ஏன்

கலங்குகிறாய்?" இதை கேட்கும் தருணத்தில் அண்ணி நூர் ஜஹான் வந்து அம்மா கூப்பிடுவதாக சொன்னதால் அக்கா நஜ்முன்னிஸா, என் விஷயத்தை விசாரிக்கும்படி அண்ணிக்கு ஆக்ஞையிட்டு போய் விட்டாள்.

"என்ன மதனீ உங்கவிஷயம்? ஏன் முகம்வாடி கண்கலங்கி இருக்கு? உண்மையை ஒளிக்காமல் சொல்லு, உங்களுக்கான உதவியை என்னால் இயன்றமட்டும் செய்கிறேன். நாமெல்லாம் இருக்கும் போது கன்னிப் பெண்ணான நீ எதற்காக கண்கலங்க வேண்டும்?" ஒரே மூச்சில் இத்தனையும் நூர்ஜஹான் அன்பும் ஆசையும் ததும்ப கேட்டுவிட்டாள். உண்மையில் அவளுக்கு என்மீது அலாதிபிரியம்; இவளுக்கு மட்டுமல்ல, என் சகோதரிகள் யாவருக்கும் என்மீது அதிகபாசம் வைத்திருந்தார்கள். நான் அவ்விதமாக அன்போடு எல்லாரிடமும் பழகிவந்தேன். அண்ணியிடமும் அறிவு என்ற அழியா செல்வ மிருந்தது.

"அண்ணி இப்போது அன்னை சொன்ன வார்த்தைகளை அறிவீர்களா?"

"என்ன சொன்னார்கள்?"

"என்னை கேழ்க்க வந்தவரிடம், அப்பா இருக்கும் வரையில் தள்ளிக் கொண்டு போய்விடும்; அதன் பின்எப்படி போகுவது என்றார்களே! அல்லாவின்மீது அவருக்கு கொஞ்சமாவது நம்பிக்கை இருக்கிறதா? வாழ்வு தாழ்வு உலகில் சகஜம்தானே? கடைசி வரையில் அவர் சம்பாதிக்காமலேவா இருப்பார்?"

"என்மதனீ உங்களுக்கு அவரைதான் பிடித்திருக்கிறதா?"

"பிடித்தது மட்டுமல்லஅண்ணி, நான் இப்போது உயிர் வாழுவதும் அவருக்காகத்தான்"

"மனப் பொருத்த மிருந்தால் மற்ற பொருத்தம் எதற்கு? நான் அம்மாவிடம் சொல்லி முடிவு செய்கிறேன். அதை பற்றி கவலை படாதிங்க மதனீ" வாஞ்சையுடன் சொல்லி விட்டு என் அம்மாவிடம் போனாள்.

"எம்மா இப்போவந்து பெண் பேசினார்களே யாருக்காக?" ஒன்றும் தெரியாதவள் போல் நூர்ஜஹான் அம்மாவை கேட்டாள்.

"ஒன்றுமில்லாத ஊரை சுற்றிக் கொண்டு வருகிறானே என் சிற்றப்பன் பிள்ளை ரஜாக் பாக்ஷா அவனுக்கு ... ..."

"நீங்கள் இல்லை என்று சொல்லிவிட்டீர்களா?"

"வேறே சொல்வதற் கென்ன இருக்கு?"

"எனக்கு கல்யாண மாகும்போது எங்க வீட்டுக்கார் சம்பாதித்துக் கொண்டிருந்தார். இப்போ சம்பாதிக்காம தானே இருக்கிறர், ஏன் என் விவாகரத்து கோரவில்லே?" இடையில் அக்கா ஜஜ்முன்னிஸா கேட்டாள்.

"அது என்னடி புதிரு போடுறே. அது உன் இஷ்டம், விவாகரத்தாவது கோரு அல்லது........"

"கல்யாண மானவளுக்குதான் அவள் இஷ்டம். கன்னி பெண்களுக்கு அவள் இஷ்டமென்பது இல்லையா?" அண்ணி கேட்டாள்.

"எல்லாருக்கும்தான் அவங்க இஷ்டம், இதில் கன்னி பெண் என்ன? கல்யாணமானவள் என்ன?" என் தாயார் சொன்னுள்.

"இல்லேயம்மா, நீங்கள் சொல்வது உண்மையானுல் மதனியை கேட்காமல் ரஜாக் பாக்ஷாவுக்கு பெண் கொடுக்க மாட்டோமென்று சொல்வீர்களா?" நூர்ஜஹான் கேட்டாள்.

"நாம் இருக்கும்போது அவளே என்ன கேட்கணும், அதுவும் கண்ணுக்கு தெரிந்து கிணற்றில் தள்ள முடியுமா?"

"அந்தக் கிணறே அவளுக்கு கைலாசமாக இருக்கிறதென்ருல்?" நூர்ஜஹான் விடாமல் கேட்டாள்.

"புதிதா என்ன இது! அர்த்தமில்லாத வார்த்தைகள் எல்லாம் பேசுகிறீர், ஏன் ஹபீப் ரஜாக்பாக்ஷவைதான் மணம் செய்துக் கொள்வேன் என்ருளா என்ன?" வியப்புடன் அம்மா கேட்டாள்.

"இல்லாவிட்டால் நாம் ஏன் வேலையைவிட்டு வாதாடுகிறேம்?" நூர்ஜஹான் சாக்தமுடன் பதில் சொன்னுள்.

"அவள் இஷ்டப்படி கல்யாணம் செய்ய நான் அவளுக்கு கீழ் படிந்தவளில்லே" அம்மா இதைகோபத்தோடு சொல்லிவிட்டு அந்த இடத்திலிருந்து அகன்று விட்டாள்.

என் மனதில்எரிமலேகக்கிக் கொண்டிருந்தது. "ஹபீப், கலங்காதே. மறுபடியும் நாம்பேசி உன்வாழ்வை வளம்பெற செய்கிறேம்" அக்காளும் அண்ணியும் எனக்கு ஆறுதல் அளித்துவிட்டு மக்ரிப் தொழுகைக்குபோய் விட்டார்கள். என் மனம் சாந்தி அடையவில்லே. ஆண்டவனைத் தொழுதாகிலும் மன நிம்மதி அடை யலாமென்ருல் மாதவிடாய் என்ற மலேபாம்பு வழிமறுத்து நின்றது. அன்றிரவு சாப்பாடும் நடக்கவில்லே. பஞ்சணையில் புரண்டுகொண்டிருந்தேன். தூக்கம் வரவில்லே.

'அவள் இஷ்டப்படி கலியாணம் செய்ய நான் அவளுக்கு கீழ் படிந்தவளில்லே' அம்மாவின் இவ்வார்த்தையே என் காதில்

ஒலித்துக்கொண்டிருந்தது. அத்துடன் என் மனம் என் காதலரை நினைத்து புலம்பிக் கொண்டிருந்தது.

என் காதலின் கட்டிகரும்பே, நான் கண்கலங்குவதைப் பார்த்தால் தங்கள் மனம் என்னபாடுபடும்? என் உரிமைக்காக பாடுபட்டு போர் தொடுப்பேன் என்று தங்களுக்கு வாக்குறுதி அளித்து, படைத்த நாயனையும் மறக்கச்செய்யும் பணத்திற்காக எனதுள்ளத்தை கொள்ளைகொண்ட இன்னுயிராகிய தங்களை இழக்கவா? என்வாழ்வின் ஜோதியே! தாங்கள் அன்றோ இந்த சிங்காரியை விழைந்த சுகுமாரன்! என் சுகக்கடலே! தாங்கள் அன்றோ திக்கெல்லாம் போற்றும் தீரன். காதல் கற்கண்டே, தாங்கள் அன்றோ கருமாரனுங்கண்டு நாணும் பெருமாரன்! குணக் கரும்பே, தாங்கள் அன்றோ என் குறைதீர்க்கும் குமரன்! சிறுமை யின் சிற்றரசே, தாங்கள் அன்றோ சுயேட்சையான செல்வ சிந்தா மணியை சிறைகொண்ட சவுந்திரிய சிகாமணி! வறுமையின் வடிவழகே, தாங்கள் அன்றோ பணத்தின் பெருமையை குலைத்து பாமரமக்கள்மீது பாசம் கொள்ளும் பரந்தாமன்! என் மனதிற்கி சைந்த மன்னவரே, மண்ணுலகத்தில் நான் தங்களுக்கு மனைவி யாக ஆகுவேனா! கருணையிற் கடலையும், கலைஞானத்தில் ஆதி சேடனையும், அறிவிற்குருவையும், பொறுமையிற் பூமடந்தையும், ஒளியிற்சூரியனையும், கீர்த்தியிற் சந்திரனையும், கொடையிற் கொண்டலையும் போகத்திற் புரந்தரனையும், அறிவின் அளவில்லாத நிதியில் அளகேசனையும், வென்ற விறல் வேந்தே! தங்களின்றி இவ்வுலகில் நான் வாழ்வேனா! வாழ்வுதான் இதற்கு சம்மதிக்குமா! அப்படி சம்மதித்தாலும் என் மனதிற்கு சாந்தி அளிக்குமா!

இவ்வாறாக என் மனம் சஞ்சலமிட்டுக்கொண்டிருந்தது.

மறுநாள் எனக்கு பக்கபலமாக இருந்த அண்ணி நூர்ஜஹான், ஒரு முக்கியமான காரியத்திற்காக என் அம்மாவையும் அழைத்துக் கொண்டு தன்வீட்டுக்கு போய்விட்டாள். இதனால் என் கல்யாண பேச்சு தடைபெற்றது. அம்மா சொல்லிய வார்த்தையால் அவர் என்ன நினைக்கிறாரோ? என்றபீதியால், கடவுள் கிருபையால் கூடிய சீக்கிரம் நாம் ஒன்றாக சேருவோம். அதைபற்றி கவலை படாமல் பொறுமையாக இருக்கவேண்டுமென்று நம் ஆத்மீக காதலை ஆண்டவன் அழிக்கமாட்டான் என்ற திட நம்பிக்கையில் என் காதலருக்கு எழுதி அனுப்பினேன்.

நான்குநாட்களுக்குபின் என் அம்மாமட்டும் திரும்பிவந்தாள்; அண்ணி நூர்ஜஹான் வரவில்லை.

"என்டி நாளுக்குநாள் வீணாக கரைந்துக்கொண்டேபோறே?" சோகமே உருவாகிபடுத்திருந்த என்னைப்பார்த்து அம்மா பரிதாபத் தோடு கேட்டாள்.

"என்னை சீராட்டி, பாராட்டி, சீராட்டி தாலாட்டி வளர்த்த நீயே, பணத்திற்காக என் வாழ்வை பாழாக்க சத்துருவாக இருக்கும்போது நான் எப்படி சந்தோஷமாக இருக்கமுடியும்?" எனக்கிருந்த ஆத்திரத்தில் ஆங்காரத்தோடு சொன்னேன்.

"பெற்றதாயே பிள்ளைக்கு சத்துருவாக இருப்பாளா? உன்னை பற்றி நூர்ஜஹான் எல்லாம் சொல்லிஇருக்கிறாள். உன் மாமன்மார்களையும் மைத்துனரையும் கேட்டுக்கொண்டு உங்கள் அப்பாவுக்கும் அண்ணனுக்கும் கடிதம் எழுதி போடுகிறேன். ஜோடு இருந்தா விடப்போகிறதா?" என் அம்மா இவ்வளவு சொன்னதும் என் கலியாணம் நிச்சயமாய் விட்டதுபோலவே எனக்கு தோன்றியது. அன்று இஷாத் தொழுகைக்கு போகும்போது தான் மைத்துனர் அப்துல் றஷீது வந்தார். நான் தொழுது முடிந்ததும் என் அம்மாவுக்கும் அப்துல் ரஷீதுக்கு மிடையில் நடந்த சம்பாஷணைதான் என் காதில்விழுந்த வரையில் முதலில் கூறப்பட்டது. (தொடரும்)

கோதுமை ஹல்வா.

$\frac{1}{4}$படி சுத்தி செய்த கோதுமையை தண்ணீரில் 3நாள் ஊர வைக்கவும் (தினசரி தண்ணீரை மாற்றி ஊரவைக்கவும்) 3-வது நாள் எடுத்து களஞ்சி சுத்தம்செய்து, தண்ணீரை நீக்கி, கோதுமையை உரலில் ஆட்டி எடுக்கவும். பின்பு அதில் தண்ணீர் விட்டு பிசைந்து, வடிக்கட்டிவரும் கோதுமைபாலை ஒரு பாத்திரத்தில் விட்டு சிறிது நேரம் வைத்தால், கீழ்மாவு உறைந்தும் தெளிந்த தண்ணீர் மேலும் மிருக்கும். அத்தண்ணீரை தெளிவாக எடுத்து வெளியில் ஊற்றிவிடவும். உறைந்த மாவை எடுத்து வைக்கவும்.

இரும்பு கடாயில் $\frac{1}{2}$ வீசை சற்கரையில் $\frac{1}{2}$ ஆழாக்கு தண்ணீர் விட்டு காய்ச்சவும். ஜீரா பதமாய் வந்ததும், இதில் மேலே சொன்ன உறைந்த மாவை கொஞ்சம் கொஞ்சமாக கொட்டி கிளறவும். ஜீராவும் மாவும் நன்றாக கலந்தபின் $\frac{1}{4}$ தோலா ஜாப்ரான் (அறைத்து) கலக்கவும். 5 பலம் சுத்தநெய் ஊற்றி கிளரவும். நெருப்பு தீ அதிகமிராமல் பார்த்துக்கொள்ளவும். அவ்வாறு கிளரும்போது முதலில் நெய் சேர்ந்து மறைந்துவிடும். இன்னும் கிளர கிளர பின்பு நெய் தெரியவரும். அப்பொழுது சிறுதுண்டுகளாக நொறுக்கிய சாரைபருப்பு $2\frac{1}{2}$ பலம், பாதம்பருப்பு $2\frac{1}{2}$ பலம், பிஸ்தா $2\frac{1}{2}$ பலம் போட்டு கிளரி இறக்கவும். ருசிகரமுள்ள கோதுமை ஹல்வா தயாராகிவிட்டது.

மாண்புறும் நோன்பு

(வேளாங்கண்ணி—சாந்திதாஸன்)

மனித வாழ்விலே மகத்தானதொரு சாதனையை சமர்ப்பிக்கும் பொன்னுள்களின் பட்டியலிலே நன்னாள் ஒன்று பொதிந்துள்ள தெனின், அதுதான் முப்பது நாள்களின் முடிவிலே—நம் ஒவ்வொருவர்களின் இதயத்திலும் மதிப்பிடற் கரிய ஒரு மோட்ச "சாம்ராஜ்யத்தையே" உருவாக்கும் வைராக்கிய விரதமென்று மிக சுலபமாக மொழிந்து விடலாம்: அத்தகைய அமரத்வ ஆன்ம அரும் தியாகத்தினைதான் அன்பின் பெருக்கால், ஆயாசமின்றி, முக்திக்கோர் மகுடமாக, சிருஷ்டித்தோனின் சத்திய சோதனையாக—ஊக்கத்தின் உறைவிடமாக உறுதி பிரமாணம் ஏற்று அமைதியின் பக்கல் இன்று அரவணைத்துக் கொள்கின்றோம். இதைதான் இங்கு அவ் விறைவனும் தனது தூயத் திருமறையிலே "ஷஹ்ரி ரமலானல்லதி உன்ஜில—பில் குர்ஆன்!" என்று அதிக முக்கியத்துவ குறிக் கோளாக முழக்கியுள்ளான். மாசுகள் மடிந்து, மகோன்னத வழி புக நமக்கு, அவற்றின் வாயலை மறுப்பின்றி திறந்து வைக்கும் பெருமைக்குரிய இந்நாளை "நோன்பு" என்று அராபிய அர்த்த புஷ்டிகளோடு நாம் நாளடைவில் நவீனப்படுத்தி நவில்வதில் வியப்பொன்றுமில்லை. எம் பெருமானுர் (ஸல்) அவர்களின் மூன்றுவது முரசொலியாக அவர்களது தேனினு மினிய அதர அசைவில் நின்றும் வெளிப் போந்த முறையீடும், அவர்களுக்கு அல்லா ஜல்லஷானஹு—வதஆலா அருளி ஈந்த அரும் பொருளும் தான் இந்த விரதமென்பது ஒரு வெளிப் படையான விளக்கமும் கூட, எனினும், உணர்ந்த எமது சோதர உண்மை முஸ்லிம்களில் பெரும் பகுதியினர் இவற்றை உவகைததும்ப வரவேற்க வேண்டிய கட்டாயக் கடமையினையும் உதறித் தள்ளிவிட்டு, ஒழுக்கமற்ற வகையிலே பகிரங்கமாகவே பகற்காலங்களில் சென்ற பதினொரு மாதங்களின் பிரதியட்சமாக பலவகை பதார்த்தங்களை "பெருச்சாளிகள்" போன்று புசித்து சுகிக்கின்றனர். இது இஸ்லாமிய அடிப் படைக்கே ஈடு செய்ய முடியாத மாபெரும் சாபக்கேடு என்றுதான் சொல்ல வேண்டும். இந்த இடத்திலே—கேவலம் பன்றிகளும்—அத்தகைய பெருந்தகை போலி வேஷ பிரமுகர்களும் பரஸ்பர நண்பர் களாகி விடுகின்றனர். "நவூதுபில்லாஹி மின்ஹா!". ஒருசில அன்னியர்களுக்கு உள்ள ஆர்வமும், அக்கரையும் உரியவர்களுக் கில்லை இந்த விரத விஷயத்தின் கண்ணோட்டத்திலே எனின், இதைவிட வேறு வெட்கக்கேடு வேண்டுமா? இதோ அத்தகைய விநாசப்பாள் தவிளிம்பிலே நின்று ஆடும் வேதாளங்களுக்கு எல்லாம் வல்ல ஏகன் எதிரொலி செய்யும் எச்சரிக்கையின் எடுத்துக் காட்டுகள் சில.

"இன்னல்லாஹா—கான அலைக்கும் ரகீபா!" — ஓ... மனித உருவத்திலே அதீதத்தை ஆட்கொள்ளும் மிருகமே! உன் போக்கை என்னால் ஒவ்வொரு கணமும் பார்த்தறியமுடிகிறது. உனது இறுதிகால வருகை, நரக லோகத்தின் கனதிக்குரியதாகும் என்பதேயாம். அதுமட்டுமல்ல, மனித குலத்தின் நனி சிறந்த வாழ்விற்காக— அணையா கண்ணீரை இன்றுவரை சிந்திக் கொண்டிருக்கும், மாணிக்கமணிச்சுடர், மஹான் நபி (ஸல்) அவர்களுக்கு, அந்த அதிபதியாகிய அல்லாஹ், ஆக்ஞாபித்து, பிற்போக்காளர் களுக்கு புத்திபுகட்ட தந்த போதனையின் ஒருசாரம் இதோ!

"பஸ்தஃ, பிமாதுஃமரு—வ அஃறிலு அனில் முஷ்ரிகீன்!" — ஓ... முஹம்மதே! உம்மை ஆக்ஞாபிக்கப்பட்டதே. அத்தகைய நற்கிரியைகளை, தயவு, தாட்சண்யமின்றி, மக்கள் வர்க்கத்திற்கு முகம் பிளக்கச் சொல்வீராக!

"அத்தாலு—அலல்ஹைரி—கபாயிலிஹி!"— நற் செயல்களை பிறருக்கு அறிவித்தவனும், அந்நற்செயல் செய்த பிரதி அனுகூலத்தையே அடைவானாக! மேலும் அந்த தயாநிதியின் இரத்தினச் சுருக்கமான மற்றொரு மதியுரையும் இங்கு வேண்டற்குரியனவாகும் "அபில்லாஹி—ஷக்குன்" நான் ஒருவன் நிலையாக உண்டு என்பதற்கு உன்னில் சந்தேகமும் வேறு உண்டோ? என்பதேயாம். இறுதியாக அவனது ஈகையின் இதமொழியினை எடுத்துக் காட்டிவிட வேண்டுமல்லவா?

"வமன்யத்தவக்கல்—அலல்லாஹி பஹுவ ஹஸ்புஹு!" — எவனொருவன் என்பால் நன்நம்பிக்கை வைத்து, சிறந்த சமுதாய செயல் ஊக்கத்தை செப்பனிட முனைகின்றானோ, அவனே எனது "அருட் பரிசு" குரிய அடியான் என்று அப்பட்டமாக அறைந்துள்ளான். எனவே சமுதாயத்தின் பெயராலே சவக் குழியினை தோன்றும் இன்றைய விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில சழக்கர்கள் உண்மையினை உள்ளவாறே உணர்ந்து "இஸ்லாத்திய இன்பக் கோட்டை" யிலே இன்று எதேஸ்டமாக உள்ள காலி ஸ்தானங்களை ஒன்றித்த ஒத்துழைப்பின் நிமித்தம் உடனடியாக நிரப்ப முன்வர வேண்டுமென்பதே எமது வேணவா! இந்த நோன்பின் தத்துவத்தினை அன்புப் பாதையிலே அறநெறியாக அமைத்து, ஆவன வரவேற்பளிக்க வேண்டும்! இவைகளே இன எழுச்சியின் இன்றியமையாத வேண்டுகோள்!

மாண்புறும் நோன்பே நீ வாழ்க!
உன் வருகை நல்வரவாகுக!!

பொறாமையின் பரிசு

"எ. எ. ரஜாக்பாக்ஷா"

அஸர் தொழுதுக்கொண்டு நானும் நண்பன் நயீமுற்றப்பானியும் பேசிக்கொண்டே பாலாற்றில் போய் உட்கார்ந்தோம். நயீம் என்பவன் நீதி தவறாதவன். கண்ணில் பார்ப்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீரவிசாரிப்பதே மெய் என்ற உண்மையை அறிந்த உத்தமன். அவனுடைய குணத்தைக் கண்டு குழந்தைகள் முதல் கொண்டு கிழவன்வரை மரியாதை செய்து வந்தார்கள். மாட்டைதேடி காட்டைநோக்கி சென்ற இடையன், மனைவியின் நினைவு வந்து மாமியார் வீட்டைநோக்கி சென்றதுபோல், எதைபற்றியோ பேசிக்கொண்டிருந்த அவன், ஏதோ மறந்து விட்டது ஞாபகத்திற்கு வந்தவன் போல் என்னை கேட்டான்:—

"உன் கல்யாண நாள் நிச்சயத்து விட்டார்களா ரகிபுஜ்ஜமான்?"

"நிச்சயிக்கவில்லை, ஆனால் அதற்கு மாறாக நிராகரித்து விட்டார்கள்" நான் சொன்னேன்.

"காரணம்?" அதிசய ஆச்சரியத்தோடு அவசரமாக கேட்டான் நயீம்.

"அந்த பெண் நடத்தை சரி இல்லையாம்" நான் கலவரத்துடன் சொன்னேன்.

"அவள் நடத்தை ஒன்றும் கெட்டதாக இல்லையே! நீயும் இதற்குமுன் 'அவளைப்போல் நல்லவள் கிடைப்பது கடினம் என்று சொல்லவில்லையா?"

"இதற்குமுன் என்ன நயிம்! இப்பவும், இல்லை. எப்பவும் அவள் எனக்கு நல்லவள் என்றே தோன்றுகிறது. ஆனால் ஊரிலுள்ளவர்கள் அவள்மீது ஏதேதோ................" என் பேச்சு முடிவதற்குள் நயீம் சொன்னான்:—

"ரகீப்! பொறாமையாலும் பலபேர் பலவிதமான பழிகளை பாபமறியா பெண்மீது சுமத்துவார்கள். பிறருடைய சொற்களால் உன் அறிவை இழந்து அப்பெண்ணை புரக்கணிக்காதே. உன் அறிவைக்கொண்டு ஆராய்ந்தபின் பலருடைய சொல்லை நம்பி அப்பெண்ணை கைவிட்டு பொறாமைக்கு இடம் கொடுக்காதே. உன்னைப்போல் வாலிபர்கள் பகுத்தறிவைக் கொண்டு பிறர் சொற்களை வரவேற்காமல் இருந்தால் பொறாமை என்ற பேய் இடம் தெரியாமல்

பறந்துவிடும். பொறுமையைப்பற்றி ஒரு உண்மையான சம்பவத்தை சொல்கிறேன்கேள்'' என்று நயிமுற்றப்பானி சொல்ல தொடங்கினுன்.

சிறுமையின் சேற்றிலே பிறந்து வறுமையின் வாத்துடன் விளையாடி வளர்ந்த அய்ஷா முத்து மனதில் பெருமை, பொறுமை, அகம்பாவம், அகங்காரம், ஆணவம், அநீதி எல்லாம் குடிக்கொண்டிருந்தன. பிறந்த இடத்தில் மட்டும் சிறுமை சிரிக்கவில்லை. அவள் புகுந்த இடத்திலும் தரித்திரம் தாண்டவமாடியது. மாமியார் வீட்டிலும் தரித்திரத்தைக் கண்ட அவள் நாம் தனி குடித்தனம் செய்தால் வண்ணுளை வாய்அடித்து அல்லது தட்டாளை தாலி அறுத்தாகிலும் திரவியம் சேர்க்கலாமென்ற எண்ணத்தால் மணுளனை மயக்கி தனிகுடித்தனம் நடத்தி வந்தாள் அய்ஷாமுத்து.

கஷ்டஜீவனமிருந்தும் இயற்கை அதை அனுசரிக்காமல், மூன்று பிள்ளைகளுக்கும் ஐந்து பெண்களுக்கும் அய்ஷாமுத்தை தாயாக்கியது. தாயைப்போல் பிள்ளை நூலைபோல் சேலை என்பதற்கு அத்தாட்சியாக இவளுக்கு பிறந்த ஐந்து பெண்களும் இவளைப் போலவே அடம் பிடித்த அறக்கிகளாக இருந்ததுமல்லாமல், இரண்டாவது பெண் மஹ்பூபாவை தவிரமற்ற நான்கு பெண்களும் காக்கைபோல் வெண்மையாக இருந்தார்கள். புருஷன் சம்பாதிக்கும் பணம் போதாமையால் பெரிதும் வருந்திய அய்ஷா முத்துக்கு ஒரு யுக்திதோன்றியது. அதாவது இருக்கும் பந்து ஜனங்களிடமெல்லாம் சென்று ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு நாள் தங்கிவர வேண்டுமென்பதே அந்தயுக்தி. எனவே, ஒரு நாள் வீட்டிலிருந்தால் ஒன்பது நாள் உறவினர் வீட்டிலிருப்பாள். இப்படி இருக்கும் போது காலச்சக்கரம் சுழன்று இரண்டு பிள்ளைகளும் சம்பாதிக்க சென்றூர்கள். பிள்ளைகளுடைய சம்பாதனையில் ஒருசல்லி காசும் செலவு செய்யாமல் புருஷன் சம்பாதனையிலும் பாதிபணம் செலவு செய்து அழைக்காத வீடுகளுக்கு நாய் போல் அடிக்கடி, பருவமடைந்த பெண் என்றும் பாராமல் தன் எல்லாப் பெண்களையும் அழைத்து சென்று பணத்தைச் சேர்த்தாள். சேர்த்த பணத்தைக் கொண்டு ஒரு வீடு கட்டி அதில் மின்சார விளக்குடன் ஒரு ரேடியோ வைத்துக் கொண்டு பசிதீர்க்க போஜனமில்லா விட்டாலும் பார்ப்பவர்களுக்கு பெருமையாக வாழ்ந்து வந்தாள். சோற்றுக்கு சிறுமை பட்டாலும் ருது ஆகி இருக்கும் இரண்டு பெண்கள் உள்பட எல்லாரையும் அழைத்துக் கொண்டு சினிமாவுக்கு சென்று வருவாள். ரேடியோவில் வரும் சினிமா பாட்டுகள் எல்லாம் பாடும்படி பெண்களுக்கு பாடம் கற்பித்து வந்தாள் அய்ஷாமுத்து.

சினிமாவில் காதல் கட்டங்களை கண்டு காமம் உச்ச நிலைக்கு அடைந்த படியால் இரண்டாவது பெண்ணான மஹ்பூபா தன்பந்து ஜனங்களிலுள்ள காலிக் என்பவனுக்கு காதல் கடிதம் எழுதினாள். "மஹ்பூபாவுக்கு ஏற்பட்ட காதல் காமத்தினால் ஏற்பட்டதே ஒழிய கருத்தால் ஏற்பட்டதல்ல" என்று அறிந்துக் கொண்ட காலிக் அவள் காதலை தன் காலடியில் போட்டு மிதித்தான். பலமுறை அவனுக்கு கடிதம் எழுதி பலனற்று போகவே அக்காளுக்கும் இன்னும் கல்யாணமாக வில்லையே என்று ஆத்திரம் கொண்டாள். முதல் பெண்ணான நஜ்மாவை பலபேர்கள் வந்து பார்த்தும் பொருத்தமில்லாதவள் என்று புறக்கணித்தே சென்றார்கள். பணத்துடைய கவலைபோய் பெண்ணுடைய கவலை ஆய்ஷா முத்தை பெரிதும் வாட்டியது.

அவ்வூரில் செல்வகார குடும்பத்தில் பிறந்து விபசாரத்திலும் சீட்டுஆட்டத்திலும் மோகம்பிடித்த மஜீதுக்கு பல இடங்களில் பெண்கேட்டு இவன் நடத்தையைக் கண்டு யாரும் கொடுக்காததால், கருப்பா இருந்தாலும் கல்யாணமென்று ஒன்று ஆகிவிட்டால் போதுமென்ற கருத்தால் நஜ்மாவை வந்து கேட்டார்கள். தன் பெண்ணுக்கு வரன் கிடைக்கவில்லையே என்றுவாடிய ஆய்ஷா முத்துக்கு ஆனந்தம் தலைகால் தெரியாமல் ஆடச்செய்தது. பழைய சோற்றுக்காக பரதவிக்கும் ஒருவனுக்கு பிரியாணி அகப்பட்டால் எப்படி இருக்கும்? அதேபோல் மாப்பிள்ளையின் நடத்தை சீர் கெட்டிருந்தாலும் செல்வம் நிறைய இருக்கின்றதென்று பூரித்தாள். எனவே தேடிக்கிடைக்காத அந்த தாசி கள்ளனுக்கு யாதொரு தடையின்றி தன் மூத்தமகள் நஜ்மாவை மனைவியாக்கினாள்.

முதல் பெண்ணுக்கு மணம் செய்துவிட்டு இரண்டாவது பெண் மஹ்பூபா சற்று அழகாஇருப்பதால் அவளுக்கு அதிக சிரமம் எடுக்கவேண்டிய அவசியமிருக்காதென்று அகமகிழ்ந்திருந்தாள் அய்ஷாமுத்து. இவள் எண்ணத்திற்கு நேர்விரோதமாக எத்தனையோ பேர்வந்து பார்த்தும் என்ன காரணத்தாலோ கல்யாணம் செய்ய யாரும் முன்வரவில்லை.

ஒருநாள் மார்க்கச்சட்டத்தை மீறாத மவுல்வீயின் மகனுக்காக மஹ்பூபாவை வந்து பார்த்தார்கள். இவளுக்கிருக்கும் அழகிற்கு அதிகமாக அகங்காரம் இருப்பதை அறிந்த பெண்கேட்க வந்த பாவைகள் பெண் பொருத்தமில்லை என போய்விட்டார்கள். வெளியேறிய வனிதாமணிகள் அதே தெருவிலிருக்கும் அய்ஷாமுத்துவின் நாத்திமகளான இஸ்ஹாகுன்னிஸாவை கேட்டு கல்யாணம் கெட்டிசெய்து விட்டுபோனார்கள். இஸ்ஹாகுன்னிஸா என்பவள்

ஆண்டவனுக்கு பயந்து அபிப்பிராயங்களைவிட்டு யாரிடமும் அன்பாக பேசும் அழியா அழகரசி. இவளுடைய குணத்தையும் லட்சணத்தையும் கண்டு தான் அந்த மார்க்க மேதாவிகள் மணம் செய்ய முன்வந்தார்கள்.

தன்பெண்ணை பார்த்துவிட்டு போன மதவாதிகள் தன் காத்தியின்மகளை மணம்செய்ய முன்வந்ததை அறிந்த அய்ஷாமுத்துவின் மனதில் பொறுமை என்ற பேய் புன்சிரிப்புடன் குடிக்கொண்டது. ஏற்கனவே காத்திஇடம் மனஸ்தாபம் கொண்ட இவளுக்கு தனக்கும் ஏழ்மைநிலையிலுள்ள காத்திமகளுக்கு மணம் முடிவானதை பார்க்க எறியும் தீயில் எண்ணெயை ஊற்றுவதுபோல், இல்லை கால் தவறி கிணற்றில் விழுந்தவன் மேல் கல் தூக்கி போடுவதுபோலிருந்தது. ஆகையால் அக்கல்யாண கப்பல் கரை ஏறாதபடி பழி புயலை வீச செய்தாள். விலையில்லா வைடூரியம் போன்ற இஸ்ஹாகுன்னிஸாவுக்கு விபசாரி என்ற பட்டத்தை சூட்டி நிரபராதியான அக்காயமி நஞ்சை கொட்டி வஞ்சிக்கும் நாகபாம்பு என்று நானிலமறிய பிரசாரம் செய்தாள் அய்ஷாமுத்து.

ஒரு பாபத்தையும் அறியாத உத்தம பத்தினியான இஸ்ஹாகுன்னிஸா உயிருக்கும் மேலாக காத்து வந்த கற்பத்தின்மீது களங்கம் வைப்பதை கேட்க சகிக்காமல், பொறுமை பூனைகள் வாழும் இப்புவியில் புண்ணிய பறவைகள் வாழமுடியாதென்று பூலோகத்தையே மறந்து கண்மூடிக் கொண்டாள்.

செல்வந்தரின் மனைவியாகிய சிறப்புடன் சிரித்தமுகத்தோடு சென்ற நஜ்மா சிலமாதத்திற்குள் தாய்வீட்டில் போட்ட நகையும் புருஷனின் சீட்டுஆட்டத்திற்கு கொடுத்துவிட்டு சோகமுகத்தோடு பிறந்தகம் வந்து சேர்ந்தாள்.

தங்கைக்கு கல்யாணமாகும்வரை காத்திருக்க முடியாதென்று மூத்தமகன் இஸ்மாயில் பிடிவாதம் பிடித்ததால் முதலில் அவனுக்கு மணம் செய்துவைத்தாள். ஆண்டவன்மீது நம்பிக்கை இல்லாத அய்ஷாமுத்து தன்மகளை பலவாலிபர்கள் முன்னிலே கொண்டு போய் பிரபலபடுத்தினால்தான் எவனாவது ஒருவன் இவள் அழகை கண்டு வாழ்க்கை துணைவியாக ஏற்றுக்கொள்வான் என்ற விபரீத யோசனையால் அலங்கார ஆடைகளை அணியவைத்து ஐந்து பெண்களுடன் அடிக்கடி சினிமாவுக்குச் செல்லலானாள். இவள் எதிர்பார்த்தது வீண்போகவில்லை எஸ் எஸ் எல் ஸீ படித்த கப்பார் என்ற வாலிபன் சினிமா தியேட்டரில் [illegible] சந்தித்து அவள் வீசிய காமவலையில் சிக்கி அவளை[illegible] மணந்துக்கொண்டான்.

18704

மஹ்பூபாவுக்கு மணமானதும் இரண்டாவது குமாரனாகிய இப்ராஹீம் தனக்கும் மணம் செய்யவேண்டுமென்று மன்றாடினான். "இப்போது உனக்கு மணம் செய்ய பணம் எங்கேடா இருக்கிறது" என்றாள் அய்ஷாமுத்து. "சாப்பிடுவதற்காக சம்பாதித்து பணமனுப்பினால் அதில் நகைகளை செய்து போட்டுக்கொண்டிருக்கிறாயே! அதை அடக்குவைத்துஆகிலும் கல்யாணம் செய். அறியாபெண்கள் எல்லாம் ஆபரணமின்றிருக்க அறுபது வயது கிழவியாகிய உனக்கு நகை எதற்கு?" என்று சீறிவிழுந்தான். தன்மீதுள்ள நகை போய்விட்டால் ஏழை என்று கருதி தன் மூன்றாவது பெண் ஹபீபாவை யாரும் வந்து கேட்க மாட்டார்களே என்ற பீதியோடு நகை போட்டுக் கொண்டிருந்தா லாகிலும் பெண் கருப்பா இருந்தாலும் பணக்காரர் என்ற முறையில் யாராகிலும் கல்யாணம் செய்துக் கொள்வார் என்ற அர்த்தமற்ற யோசனையை அடிப்படையாகக் கொண்டு ஊரைசுற்றி கடன் வாங்கி இப்ராஹீமுடைய கல்யாணத்தை நிறை வேற்றினாள்.

மூன்றாவது மகள் ஹபீபாவை தம்பி முறையில் இருக்கும் கமால் பாக்ஷாவுக்கு கல்யாணம் செய்து விடலாமென்று கனவு கண்டிருந்தாள் அய்ஷாமுத்து. ஆனால் கமால் பாக்ஷாவின் மாதாப் பிதாக்கள் அவனுக்கு வேறொரு இடத்தில் பெண் பார்த்து மணப் பேச்சை முடிவு செய்திருந்தார்கள். இதை கேள்வியுற்ற அய்ஷாமுத்து தான் கண்ட கனவு கானல் நீராக போகிறதே என்று பொறாமையின் சூழ்ச்சியால் மணமகளின் வீட்டார்மீது பல குறைகளை குறிப்பிட்டு மொட்டை கடிதங்கள் மாரலாய் மணமகன் வீட்டாருக்கும், மணமகன் மீது குறைகுறிப்பிட்டு மணமகள் வீட்டாருக்கும் எழுதி கமால் பாக்ஷாவின் கல்யாண தோட்டத்தில் தென்றலை அகற்றி தீயை திறப்பி நிம்மதியை அடைந்தாள்.

ஒரு சமயம் தன் மூத்தமகள் நஜ்மாவை மட்டும் தனியாக வீட்டில் விட்டு அய்ஷா முத்து மற்ற பெண்களுடன் வெளியூர் சென்றிருந்தாள். தனியாக இருக்கும் நஜ்மா எந்நேரமும் வாசற்படியிலே நின்று தெருவை நோக்கிக் கொண்டிருந்தாள். அவ்வழியாக சென்ற வாலிபன் அயலானாகிய தன்னை கண்டும் நஜ்மா கோஷா ஆகாமல் நின்றுக் கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரிய மடைந்தான். ஆச்சரிய மடைந்த அந்த அழகன் அத்துடன் விடாமல் இரண்டு மூன்று முறை அத்தெருவை முற்றுகை யிட்டான். நஜ்மா சற்றும் நகராமல் அவ்வாலிபன் மீதே தன் விழிகளை வீசினாள். தன்மீது காதல் கொண்டுதான் தன்னையே இமை கொட்டாமல் பார்க்கிறான் என்று கருதிய அக்காண்டிபன் காதல் கடிதம் ஒன்றெழுதி அவள் முன் எறிந்தான். அவன் கடிதம் போட்டது எதிர் வீட்டு பெண்மணிகள் இருவர் பார்த்த படியால் என்ன விபரீதம் நேருமோ என்று திகில்

அடைந்த நஜ்மா தன் தவறை தவிர்க்க திட்டமிட்டாள். சில நாட்களுக்குபின் வெளியூரிலிருந்து வந்த தன் அம்மா அய்ஷாமுத்து இடம், தங்கை ஹபீபாவுக்கு காதல் கடிதம் எழுதி கமால் பாக்ஷா போட்டானென்றும் அதை எதிர் வீட்டுகார் பார்த்ததாயும் பொய் சொன்னாள். பிறர் வாழ்வை வாழ்வென்று கருதாமல் தன் வாழ்வே பெரும் வாழ்வென்று பாவிக்கும் படோடபகாரியான அய்ஷாமுத்து எதிர் வீட்டுக்கார் பார்த்து விட்டபடியால், தன் பொய்யான பெருமையும் பாழாய் போகுமே என பயந்து இச் சம்பவத்தை யார்மீது சாற்றலா மென்று சிந்தித்தாள். வெளியூர் சென்றிருக்கும் போது நாத்தியின் மற்றொரு மகளான ரஜ்ஜாக்குன்னிஸாவுக்கு கல்யாணம் நிச்சயமாகி இருப்பதை அறிந்தவுடன் அவள் கற்பிலே களங்கம் வைக்க கங்கனம் கட்டினாள் அய்ஷாமுத்து. கமால் பாக்ஷா ரஜ்ஜாகுன்னிஸா மீது காதல் கொண்டிருப்ப தாயும் கடிதம் எழுதி போடுவதாயும் கண்டவர்களுக் கெல்லாம் கூறினாள். ஆராய்ச்சி செய்வதற்காக ஆண்டவன் அறிவை கொடுத்திருந்தும், ரஜ்ஜாகுன்னிஸாவுக்கு காதல் கடிதம் எழுதி அதை அய்ஷாமுத்து வீட்டில் போட வேண்டிய அவசியமென்ன என்பதை ஆராய்ந்து பார்க்காத அரக்கர்களும், எம். எ. படித்து மண்ணுலக அனுபவம் பெற்ற மேதாவிகள் என்று மார்தட்டும் மடையர்களும், இப்பழியை உண்மை என்று ஒப்புக் கொண்டார்கள்.

இந்த பொறுமையின் வதந்தியை கேட்ட நாத்தி பொருமை இழந்து அய்ஷாமுத்து இடம் சொன்னாள்: "உன் மகள்களுக்குதான் எழுதவும் படிக்கவும் பாடவும் சினிமா பார்க்கவும், கண்டார் மீது காதல் கொள்ளவும் நீ கற்றுக் கொடுத் திருக்கிறாய்! என் மகளுக்கு எழுத படிக்க ஏதாவது தெரியுமா? உன் மகளைப் போல் என் மகள் ஊர்வூராக சுற்றினாளா? அல்லது சினிமாதான் பார்த்தாளா? மேலும் கமால் பாக்ஷா என்பவன் உனக்குதான் சொந்தமே தவிர எனக்கு சொந்தமானவனா? என் மகள் அவனுக்கு தெரியுமா? அப்படி தெரிந்திருந்து என்மகள்மீது கமால் பாக்ஷா காதல் கொண்டது உண்மையானால் அக்கடிதம் என் வீட்டில் தானே போட வேண்டும்? உன் வீட்டில் போடவேண்டிய நிர்பந்தமென்ன? ஒரு பெண்மீதுதான் பழி போட்டு அவள் வாழ முடியாதபடி மரண மாக்கினாய். இப்போது நான் வைத்திருக்கும் ஒரு பெண்ணையும் வாழ விடமாட்டாயா? நாங்கள் ஏழ்மை நிலையிலிருக்கிறோமென்று அகம்பாவம் பிடித்து ஒன்றுமறியா பெண்மீது பழி சுமத்துகிறாய்! ஆண்டவன் உன் கெர்வத்தையும் பெருமையையும் கூடிய சீக்கிரம் குலைப்பா னென்பதை மறவாதே" பச்சை மரத்தில் ஆணி அடித்ததுபோல் நாத்தி பகர்ந்தாள்.

தன் பெண்மீதே சாத்தி குற்றம் சாற்றுவதாக அய்ஷாமுத்து தன் கணவனிடம் கண்ணீர்விட்டு முறையிட்டாள். மனைவியின் முறையீட்டை தலைமேல் தூக்கி கொண்டு தன் தங்கையிடம் போர் தொடர்ந்தான் அந்த பெண்ஜாதியின் பேச்சில் நடக்கும் பேடி. புரிந்த போர் பெரியதாகி பகை என்ற புலி இருவர் வீட்டுக்கும் நடுவில் நின்று போக்கு வரத்தை தடை செய்தது.

சில நாட்களுக்குப்பின் வெளியூரிலிருந்து வந்த கமால் பாக்ஷா இவ்விஷயங்களை கேள்வியுற்று திடுக்கிட்டான். தன்மீது பழிசுமத்தினர்கள் என்றா? இல்லை ஆயிரம் பொய்சொல்லி ஒரு கல்யாணத்தை நிறைவேற்றவேண்டு மென்றிருக்க ஒன்றுமறியாபெண்மீது அபாண்டமான பழி போட்டு ஆகும் காரியத்தையும் ஆகாமல் செய்கிறார்களே என்று. உலகமறிய ஆண்கள் எவ்வளவுதான் பாபம் செய்தாலும் சமூகம் அவனை விடாமல் கட்டி அணைக்கிறது. ஆனால் பாபமறியா ஒருபெண்மீது பொறாமையால் பழி ஏற்பட்டு விட்டால் சமூகம் அவளுக்கு சதிகாரி என்ற சன்மானத்தை கொடுத்து சவக்குழியில் தள்ளுகிறது. இவ்விதமான மூட சமூகத்தில் பெண்ஜன்ம மெடுத்த அந்த ராஜ்ஜாகுன்னிஸா கதி என்னவாகும்? இதை கற்பனை செய்து பார்க்கும்போது கமால்பாக்ஷாவின் கண்களில் இருந்து அவனையும் அறியாமல் கண்ணீர் கொட்டியது.

பழிசுமத்தப்பட்ட பெண்ணின் வாழ்வு பாழாக்கி விடாமல் அவளைத் தானே திருமணம் செய்துக்கொள்வ தென்ற தீர்மானத்திற்கு வந்தான்.

தன் மகள் ஹபீபாவை மணந்துக்கொள்ளும்படி பலசூழ்ச்சிகளும், பலபேர் இடமும் கமால் பாக்ஷாவுக்கு சொல்லி அனுப்பினாள் அய்ஷாமுத்து. கமால்பாக்ஷா உலக அனுபவமற்றவ னென்றாலும் ஆராய்ச்சிசெய்யும் தன்மையுடையவன். அதிலும் சில உதாரணங்களை காட்டி இச்செயல்களிலுள்ள சிங்காரிகளை மணக்க வேண்டாமென்று, முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் சொல்லியதை அறிந்த கமால்பாக்ஷா அவர் சொல்லிய அதே செயலிலுள்ள சதிகாரி அய்ஷாமுத்துவின் மகள் ஹபீபாவை அவன் எப்படி மணந்து கொள்வான்? எனவே பழிசுமத்தப்பட்ட பெண்ணையே பெண்ஜாதியாக அடையவேண்டுமென்று மாற்றமுடியாத முடிவுக்கு வந்தான். இம்முடிவை அறிந்த மூளையில்லா மடையர்கள் சிலர் மீண்டும் பொறாமைகொண்டு பழி என்ற பூதங்களை அனுப்பி ராஜ்ஜாகுன்னிஸாவின் கல்யாண கன்னிமாடத்தை நாசமாக்க கட்டளையிட்டார்கள் ஆண்டவனையே துணையாகக் கொண்ட அஞ்சா நெஞ்சம் படைத்த கமால் பாக்ஷா தன் அறிவின் ஆராய்ச்சி என்ற அறிவாளால் அப்பூதங்களை வெட்டி வீழ்த்தி, முடிவு செய்தபடி

ரஜ்ஜாகுன்னிஸாவுக்கு மாலையிட்டு மனித தன்மை யற்ற மடையர்களின் மூடநம்பிக்கைக்கு மூடிவு கட்டினுன்.

தன்மகளை புரக்கணித்து கமால்பாஷா நாத்திமகளை மணம் புரிந்ததை பார்த்த அய்ஷாமுத்து தன் சூழ்ச்சி பலிக்கவில்லையே என பரதவித்து பாயில் படுத்துக்கொண்டாள்.

“ஆண்டவனின் அடியாளாக இருந்தும் அவன்மீது நம்பிக்கை யற்று அவன் கட்டளைகளை மீறி, பாபமறியா பெண்மீது பொறுமையால் பழிகளை சுமத்தி என் கட்டளை நிறைவேற்றி என்னை கவுரவித்ததற்காக இன்றிலிருந்து உன்னிடம் எதுவும்வேலை வாங்காமலே பின்ஷனும் பரிசும் கொடுக்கிறேன் பெற்றுக்கொள்” என்று நெஞ்சையும் மிஞ்சிய வஞ்சகநோயை வாஞ்சையுடன் அய்ஷா முத்துவின் நாவிற்கு பரிசாக அளித்து பேசாதபடி வாயை பூட்டி அனுதினமும், என்? ஒவ்வொரு நிமிஷமும் வேதனை என்ற வெகு மானமும் கொடுத்துவந்தது பொறுமையால் வந்த பழியின்பேய்.

எந்த மக்கள்களின் நலத்திற்காக பிறபெண்கள்மீது பழி சுமத்தினுளோ அதேபெண்கள் தன் நாவிலிருந்து வரும் புழுக்களையும், துர்நாற்றத்தையும் கண்டு அவ்வறைக்கே வராமல் நான்கு நாட்களுக்கு ஒருமுறை வந்து நான்கு கெஜதூரத்திலிருந்தே எதுவும் கேட்காமல் பார்த்து போனுர்கள். தான் பெற்ற பெண்களின் இப்பாராமுகத்தை நினைக்கும்போது அய்ஷா முத்து மனதில் ஏற்பட்ட ஆத்திரமும் அவமானமும் அளவிட்டு சொல்லமுடியாது. பிறருக்கு அளித்த துன்பத்திற்கு வட்டியுடன் பத்துமடங்கு துன்பத்தைவிட அதிகமாக பிரதிபலனை பூலோகத்திலே பெற்று பாவித்துக்கொண்ட பிறகு துயரமென்ற தேளை தோழனுகக்கொண்டு மரணமென்ற மலைமீது ஏறி, சமாதி யென்ற சவக்குழிக்குள் பிணமாக படுத்துக்கொண்டாள் அய்ஷாமுத்து.

இச்சம்பவத்தை கதைபோல் சொல்லிவிட்டு “பார்த்தாயா ரகீப், பொறுமையால் அய்ஷாமுத்து அடைந்த பரிசை” என்று நயீமுற் ரப்பானி கேட்டான்.

“பார்த்தேன் நயீம், இப்பொறுமையை ஒழிக்க ஒவ்வொரு மனிதனும்முன் வரவேண்டும். ஆனல்.........”

“ஆனுலென்ன ரகீப்! அதற்குள் அவநம்பிக்கை வந்துவிட்டது?”

“நீயோ பலஇடங்களில் பிரசங்கம் செய்கிறுய். இச்சம்பவத்தை சொல்லி சீர்திருத்துவாய். அதிலும் நீ ஒரு எழுத்தாளன், பத்திரிகையில் பிரசுரித்து பாபத்தை அகற்றுவாய். இத இரண்டிலும் திறமை யற்ற என்னைபோலுள்ளவர்கள் எப்படி சீர்திருத்த முடியும் என்பதுதான் தெரியவில்லை”

"பிரசங்கத்திலும் பத்திரிகையிலும் வெளியிட்டு சீர்திருத்த முடியாவிட்டாலும் ஐந்து வேளை தொழுகைக்குபின் ஆலமடங்கலையும் படைத்த அந்த ஆண்டவனிடமே உலகத்திலுள்ள மனிதர்கள் யாரும் பொறாமை கொள்ளாமல் சகோதர சகோதரி வாஞ்சையுடன் ஒருவருக் கொருவர் உதவிபுரிய கெட்ட எண்ணங்களை மனதிலிருந்து அகற்றி நல் எண்ணங்களை கொடுத்து நாதாக்களின் கூட்டத்தில் சேர்த்துக் கொள் ஆண்டவனே, என்று கேட்டால் ஆலமடங்கலையும் சீர்திருத்தின புண்ணியம் கிடைக்கும். இதுவும் உன்னால் செய்ய முடியாதா?" என்று நயீம் கேட்டான்.

"அவசியம் முடியும். என்னால் மட்டுமென்ன, ஆண் பெண் எல்லாரும் சமூக சகோதர சகோதரிகளை தூரு பாபத்திலிருந்து மீட்க எண்ணம் கொண்டால் இது முடியாத காரியம் ஒன்றுமில்லை. நானும் மக்ரீப் தொழுகையில் யிருந்து இப் பிரார்த்தனையை ஆரம்பம் செய்கிறேன்" என்று சொல்லும் போது மக்ரீப் பாங்கு சப்தம் ஒலிப்பெருக்கி கருவி மாரலாய் கேட்ட படியால் அவ்விடத்தை விட்டு மஸ்ஜிதை நோக்கி நடையைக் கட்டினேம். அதுவும் எனக்கு நிச்சயமாகி நின்றுவிட்ட நாயகியான முனவ்வர் ஜஹானையே மணந்துக் கொள்ள வேண்டு மென்ற முடிவோடு மஸ்ஜிதுக்குள் புகுந்தேன்.

(இக்கதையிலுள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுபவையல்ல.)

காலி, கோரி கிஸ்ஸா

எல்லாம் வல்ல ஆண்டவனின் சிருஷ்டிப் பொருள்களில், மானிட வர்க்கத்திலும் ஏனைய வர்க்கத்திலும் ஜோடி ஜோடியாக யிருப்பதை நாம் காண்கிறோம். ஆணுக்கெதிரில் பெண்ணைப் படைத்திருப்பது போன்று, கறுப்புக்கு எதிராக வெள்ளையை உண்டாக்கி யிருக்கிறான். ஆனால் நாயன் எதை எந்த அமைப்பிலும் நிறத்திலும் படைத்திருக்கிறானோ அதில் நாம் அற்ப சொற்ப குறையேனும் கூறமுற்படுவோமாகில் அது நம்முடைய அறியாமை, மதியீனத்தையே வெளிப்படுத்துவதாகும். இச்சிறு புஸ்தகத்தில் உள்ள கதை அதற்கு சான்றாகும். இந்த கதை இரு ஸ்திரீகளைப் பற்றியதாகும். ஆதலால் இதை ஆடவர்கள் பொதுவாயும் ஸ்திரீகள் குறிப்பாகவும் படித்தறிய வேண்டியது அத்தியாவசியமாகும். இதன் விலை அணா 4.

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

விகடத் துண்டுகள்

இந்த காலத்திலே ஒருவன் லக்ஷாதிபதிபோல் வாழ வேண்டுமானுல் அவன் கோடீஸ்வரனு இருக்கணும்.

சிங்கம் ஒன்று காட்டில் ஒருநாள் ஒரு புலியைப்பார்த்து, "காட்டில் இராஜா யார்?" என்றது.

புலி: ஓ பலமுள்ள சிங்கமே, நீங்கதானுங்கோ!

பின்பு ஒரு குரங்கைப் பார்த்து, "இங்கே யார் இராஜா?" என்றது சிங்கம்.

குரங்கு: ஓ பலமுள்ளவரே நீங்க தானுங்கோ!

பிறகு ஒரு யானையைச் சந்தித்து, "இந்த காட்டில் எஜமான் யார்?" என்றது. யானை அந்த சிங்கத்தை தனது தும்பியினுல் தூக்கி சுழற்றி ஒரு மரத்தின் மேல் எறிந்தது. கீழே விழுந்த சிங்கம் எழுந்து, "நான் கேட்ட கேள்விக்கு பதில் தெரியல்லேன்னு இப்படி செய்யவேண்டும்னு இல்லையே" என்றது.

"நான் 22000 ரூபாய் கொடுத்து ஒரு செகண்ட் ஹான்ட் கார் வாங்கினேன்" என்று பெருமை காட்டினுர் ஒருவர்.

அவர்நண்பர்: ஒரு பழய வண்டியா ரூபாய் 22000.

"ஆம், ஏர் மெயில் (Air Mail) இல் அனுப்பி வைத்தாங்கோ".

றஹீம் (காதரிடம்) : இன்று எனக்கு ஐம்பது ரூபாய் தேவை. நீ அதை எனக்கு கொடுத்தால் நான் கட்டாயமாக வெள்ளிக்கிழமை உனக்கு திருப்பி கொடுத்து விடுகிறேன்.

றஹீமுக்கு காதர் ரூபாய் ஐம்பது கடன் கொடுத்தான். வெள்ளிக் கிழமையாயிற்று. றஹீமால் காதருக்கு பணம் திருப்பி கொடுக்க முடியவில்லை. அன்று

றஹீம் (அலியிடம்) : எனக்கு இன்று ஐம்பது ரூபாய் தேவை. இன்று கொடுத்தால் நான் திங்கட் கிழமையன்று உனக்கு திருப்பி கொடுத்து விடுகிறேன்.

அலி றஹீமுக்கு ரூபாய் ஐம்பது திங்கட் கிழமை வரை கொடுத்தான். அதை வாங்கி காதருக்கு கொடுத்து விட்டான். திங்கட் கிழமையன்று

றஹீம் (காதரிடம்): நான் சென்றமுறை உன்னிடம் ஐம்பது ரூபாய் வாங்கி சொன்னபடி கொண்டுவந்து கொடுத்து விட்டேன். இன்று ரூபாய் ஐம்பது கொடுத்தால் நான் அதை வெள்ளிக்கிழமைக்கு திருப்பி கொடுத்து விடுகிறேன்.

றஹீமுக்கு காதர் ஐம்பது ரூபாய் கொடுத்தான். றஹீம் வெள்ளிக் கிழமையன்று அலியிடம் பணம் வாங்கி காதரிடம் கொடுத்தான், திங்கட்கிழமை காதரிடம் பணம் வாங்கி அலியிடம் கொடுத்தான். இவ்வாறாக சிலவாரங்கள் ஆயின. றஹீம் காதரையும், அலியையும் அழைத்து, அவர்களிடம் "காதர் நீ திங்கட் கிழமையன்று ஐம்பது ரூபாய் அலிக்கு என்மூலம் கொடுக்கிறாய். அலி நீ வெள்ளிக் கிழமை தோறும் என்மூலமாக காதருக்கு ஐம்பது ரூபாய் கொடுக்கிறாய். நீங்கள் இருவரும் ஏன் நேரே ஐம்பது ரூபாயைக் கொடுத்துக் கொள்ளக் கூடாது? என்னை இதிலிருந்து விட்டுவிடுங்கள்" என்றான்.

ஹஸ்ரத் ஷய்க் பூஅலி கலந்தர் அவர்களின் சரித்திர சுருக்கம்

இப்புஸ்தகத்தில் ஹஸரத் ஷெய்க் பூஅலி கலந்தர் ஷர்புத்தீன் பானிபத்தி (றஹ்) அவர்கள் பிறந்ததும், அவர்கள் நகர வாசத்தை வெறுத்து காடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் போய் இறைவனது தியானத்தில் மூழ்கியதும், அவர்களுக்கு முர்ஷித் (குரு) ஹஸரத் ஸெய்யிதினா ஆஷிக் குதா (றஹ்) அவர்களின் தரிசனம் வாயப்பெற்றதும் அவர்களின் மஹத்தான காராமத்துகளும், அவர்களின் வபாத்தும், அவர்கள் பேருக்கு ஓதப்படும் "ஸெஹமனி பாத்திஹா" வின் விபரமும் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 4.

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

18704

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

இஹ்யா உலூமுத்தீன் மொழி பெயர்ப்பு

புதிய பதிப்பு.

ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் ஹலரத் இமாம் கஸ்ஸாலி றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களால் இயற்றப்பட்ட மஹா அரிய பெரிய நூலாகிய இஹ்யா உலூமுத்தீன் என்னும் கிதாபின் மொழி பெயர்ப்பை எதிர் பார்த்துக்கொண்டிருந்த கனவான்களுக்கு இது ஒரு சன்மானம். இது ரூயல் 1–8 பேஜ் கொண்ட பெரிய சைஸில் 42–பாரம் கொண்டது. கலிகோ பைண்டு. இதன் விலை ரூ. 5

வெளி வந்து விட்டது.

ஜவாஹிறுல் பவாயித்

புதிய ஆறும் பதிப்பு.

இப்புத்தகத்தில் 1-வது அல்லாஹு தஆலாவின் திருநாமங்களாகிய 'அஸ்மாஉல் ஹுஸ்னா' என்னும் அழகிய 99-இஸ்முகளும், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே தர்ஜுமாக்களும் தக்ஸீறுகளும் காஸியத்துகளும்; 2-வது 'அஸ்மாஉல் இலாம்' அதாவது நபிமார்கள் ஓதி வந்ததும் ஷர்ஹ விட்டும் தனித்ததுமான 40-அஸ்மாக்களும், அவைகளில் வெளியாகும் அநேக கைபியத்து, அஜாயிபு, முஃஜிஸாத்து, அஸ்றாறு முதலான மட்டில்லாத பிரயோஜனங்களும்; 3-வது 'ஹயாத்துல் ஹைவான்' என்னும் உயிர் பிராணிகள் சகல ஜந்துகள் ஒவ்வொன்றின் குணாகுணங்களும், அவைகளின் அவயவமென்னும் அங்கங்களால் மனிதர்களுக்கு உண்டாகும் பற்பல வியாதிகளுக்கு அவிழ்தங்களும்; இன்னும் ஹதீதுகளும் ஹிக்காயத்துகளும்; 4-வது மனாமுடைய தஃபீர் என்னும் கனவு நூலும், அதில் எவ்வண்ணமாய் கனவு கண்ட காக்ஷிகளுக்கு விரிவாகிய தஃபீர்களும்; அதற்கு அத்தாக்ஷியாகிய அநேக ஹிக்காயத்துகளும்; 5-வது வைத்திய சுருக்கமென்னும் சகல வியாதிகளுக்கும் தப்ப பரிகாரங்களும், இன்னும் அநேக பாயிதாக்களும் இருக்கின்றன. இவற்றில் அரபு இஸ்முகளை மாத்திரம் லெத்தோ கிருப்பில் அரபியிலும் மற்றவையெல்லாம் சுத்த தமிழாலும் அச்சிட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 6

கிடைக்குமிடம்:—

ஹாஜ் எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

முரீது உபதேசம்.

இதில் அடங்கி உள்ள விஷயங்களாவன:—உண்மை பகீர்கள் யார்? இராதத்—முரீத்— முரூதத் விபரம், முரீத் என்பவர் யார்? தஸவ்வுப் விபரம், முரீதின் ஆரம்ப நிலை, ஷேக் சன்னிதானத்தில் முரீதின் மரியாதை, முரீதுக்கு ஷைக் ஆசாரவு, சமா என்னும் புகழ் பாடக்கச்சேரி விபரம், முரீதுக்கு பீர்ஸாஹிப்பிடம் இருக்கவேண்டிய பயபக்தி, முரீதுக்கு ஷைக் ஸாஹிபின் உபதேசப்பயிற்சி விதம், சகோதரவாஞ்சையும் ஏனைய பழக்க உபசாரங்களும், அக்கியர் சேர்க்கை, செல்வந்தர் சேர்க்கை, பகீர்களுடன் சேர்க்கை வைத்தல், பகீர் ஸாஹிபின் எளிமைச் சிறப்பு, பகீரும் சுவால் செய்தலும், பகீர் சுகானுபவ ஒழுக்கம், பகீர் சாப்பாட்டு ஒழுக்கங்கள், தோழருடன் உபசாரமுறை, பிள்ளை குட்டிகளுடன் பகீரின் பழக்காசாரமுறை, பிரயாணத்தில் பகீர்கள் எவ்வாறு ஒழுக வேண்டும், பகீர் சாஹிபு இரகசம் செவியுறுதல், முஜாஹிதா (தவப்பயுத்தம்) விபரம், முஜாஹிதாவின் தாத்பரியம், முஜாஹிதாவை பூர்த்திக்கும் அம்சங்கள், ஆண்டவன் மஃரிபத், ஷைத்தானைப் பற்றிய எச்சரிக்கை, நப்ஸ் எச்சரிக்கை, ஆண்டவன் பயபக்தி, மஹான்களின் பழக்க ஆசாரங்கள், தவக்கல் என்னும் நம்பிக்கை, நற்குண சீலங்கள், ஆண்டவன் சந்நிதானத்தில் நன்னடத்தை, ஷுக்ரு (நன்றி) விபரம், ஸப்று விளக்கம், ரிஜா (சம்மதம்) உண்மை விளக்கம், பரிசுத்தம், தௌபாச் செய்தல், இராக்கால வணக்கம், நபி பெருமானாரின் இராத்தொழுகை, தனிமையில் உபதேசித்தல், உபதேச ஷரத்துகள், நப்ஸும், ஆத்துமாவும், தங்கள் ரியாஜத் குர்பு காயகத்தின் துவா, மதக்கல்வி முதலியவைகளை விரிவாய் விபரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும் இப்புத்தகத்தை வாங்கி படித்து பிரயோஜனமடைவது அத்தியாவசியம். இதன் விலை ரூ. 1-8-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

கே. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5